
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு


சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 19 வியாழக்கிழமை (04.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 350

# கிளஸ்டர் குண்டை தடை செய்ய உலக நாடுகள் முன்வருகை!

## அமெரிக்கா,ரஷ்யா,சீனா மறுப்பு

(ஒஸ்லோ)

கொத்தணி குண்டுகளை தடை செய்வது என்று நேற்று நோர்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற கூட்டத்தில் பல நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் மிகவும் முக்கியமானது என்று அதற்கான செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா உட்பட அந்தக் குண்டுகளை பெருமளவில் வைத்திருக்கும் பல நாடுகள் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. இக் குண்டு அண்மையில் வன்னியில் வீசப்பட்டதாக கூறப்படுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)



வானில் இருந்து வீசப்படும் கிளஸ்டர் குண்டுகள்



கிளஸ்டர் குண்டின் உட்பகுதி

## கப்பல் கட்டணம் 650 ரூபாயால் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவைக்கான கட்டணம் இன்று முதல் 650 ரூபாயால் குறைக்கப்படுவதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதுவரை காலமும் அறவிடப்பட்டு வந்த ஒரு வழிக்கட்டணமான 3 ஆயிரத்து 800 ரூபா இன்றிலிருந்து 3 ஆயிரத்து 150 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளதாக கப்பல் கம்பனி அறிவித்துள்ளது என அரச அதிபர் தெரிவித்தார். (ச)

## யாழ்ப்பாணத்துக்கு வந்த 132 பேர் நலன்புரி நிலையத்தில் தங்கவைப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னிப்பிரதேசத்தில் இருந்து 49 குடும்பங்களைச் சேர்ந்த 132 பேர் இதுவரை யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளனர். இவர்கள் தற்போது யாழ்ப்பாணம் திருநகர் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 வயதிற்குக்குறைந்த 15 சிறுவர்கள் உட்பட 73 ஆண்களும் 59 பெண்களும் 7 அரச ஊழியர்களும் ஒரு பல்கலைக்கழக மாணவனும் அடங்குவர். இவர்களுக்குத் தேவையான சமைத்த உணவு 3 வேளையும் மற்றும் அடிப்படைத் தேவைகள் யாவும் மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்டு வருவதுடன் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் வாரத்தில் இரண்டு தடவை மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

இங்கு தங்கியிருக்கும் அரச ஊழியர்கள் தமது சேவையினை யாழ்ப்பாணத்தில் தொடர்வதற்கு ஏற்ற வகையில் தொடர்புடைய திணைக்களங் (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் வான் தாக்குதல்

(கொழும்பு)

கிளிநொச்சி அடம்பன் மேற்கு மற்றும் புதுமுறிப்புகுளம் பகுதியிலுள்ள விடுதலை புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீது விமானப்படை (12ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

இரண்டாம் கட்டமாகத் தெரிவான பட்டதாரி ஆசிரியர்களின் விபரம்

## மழை ஓய்ந்துள்ளதால் தாக்குதல்கள் தீவிரம்



களமுனையில் தண்ணிருடாகச் செல்லும் படையினர். (படங்கள்: பாதுகாப்புத் தரப்பு)

(கொழும்பு)

வன்னியில் கடந்த சில வாரங்களாக பெய்த கடும் மழை இப்போது ஓய்ந்துள்ள நிலையில் படையினர் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மேற்கு மற்றும் தெற்குப்பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் 57 ஆவது படையணியினர் மற்றும் முதலாவது அதிரடிப்படையினர் தமது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பிரதேசத்தை விஸ்தரிக்கும் தாக்குதல் (12ஆம் பக்கம் பார்க்க)

## மாட்டீன் வீதி வரையுமான ஆஸ்பத்திரி வீதி திறப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வீதியூடாக மாட்டீன் சந்திவரை இருந்த வீதித்தடையை நீக்குவதாக 51-வது படைப்பிரிவினர் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவிடம் உறுதியளித்துள்ளனர்.

யாழ்.மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினருக்கும் யாழ். 51-வது படைப் பிரிவினருக்கும் இடையில் நேற்று முன்தினம் 51-வது படையணி முகாமில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் சார்பில் அதன் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, இணைச் செயலாளர்களான வண.பிதா நேசகுமார் அடிகளார், எஸ்.பரந்தாமன் ஆகியோரும்,

51-வது படைப்பிரிவின் சார்பில் அதன் தளபதி பிரிகேடியர் ஜெயசுந்தர ,512-வது படையணியின் (12ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பற்ற குடிநீரால் பாழாகும் ஆரோக்கியம்

வெள்ளப் பெருக்கினால் நீர்நிலைகள், கிணறுகள் அசுத்தமடைந்துள்ளன.

இந்நீரை சுத்திகரிக்காது பருகுவதனால் நீர்மூலம் பரவும் பின்வரும் நோய்கள் பரவலாம்.

- வயிற்றோட்டம்
- வயிற்றுளைவு
- வாந்திபேதி
- நெருப்புக் காய்ச்சல்
- செங்கமாரி

எனவே நீரினை பின்வரும் ஏதாவதொரு வழிமுறையில் சுத்திகரித்தபின் பருகுங்கள்.

- கொதித்து ஆறவைத்தல்
- சூரிய ஒளி மூலம் சுத்திகரித்தல்
- நீரைச் சுத்திகரிக்கும் வில்லைகள் மூலம் சுத்திகரித்தல்
- குளோரின் இடுதல்

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை
CARE International

(C-1814)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பட்டதாரி ஆசிரியர் நியமனம் இரண்டாம் கட்டமாகத் தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கு இரண்டாம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 205 பேரின் விபரங்களை வடமாகாண கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இவர்களுக்கு 24.11.2008இல் நியமனத் திகதியிடப்பட்ட நியமனக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. நியமனக் கடிதங்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டு இங்குவைத்து தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுமென வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

சதாசிவம் துளசிதாசன் (வவு/அண்ணாநகர பரமேஸவரா வித்தியாலயம்), சுப்பிரமணியம் தனரூபன் (யா/கரவெட்டி கிழக்கு அ.த.க பாடசாலை), சண்முகம் பாஸ்கரன் (வவு/கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம்),திருக்குமரன் தர்ஷா,(வவு/சிவபுரம் அ.த.க.பாடசாலை), செந்தில்நாதன் மயூரதாசன் (மன்/அரிப்பு றோ.க.த.க பாடசாலை), பொன்னுத்துரை நாகேந்திரா (யா/செட்டிபுலம் அ.த.க. பாடசாலை), தியாகராசா பிரதீபன் (வவு/ கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம்), முகம்மது பாறூக் பௌஸூல் நிஸாதா(மன்/எருக்கலம்பிட்டி கிழக்கு அ.மு.க.பாட சாலை),பிறேமானந்தி சின்னத்துரை(மு/யோகபுரம் மகா வித்தியாலயம்), குமரேசன் பால்ஷண்முகன்(யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்),

சுந்தரம் சுஜித் (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை), கீதபொன்கலன் பிறிம்றோஸ் (யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம), தங்கராசா ஜெபசுதன்(கிளி/பூநகரி சிறி விக்கினேஸ்வரா வித்தி) ஜெயந்தினி ஐயாத்துரை (யா/குடத்தனை அ.த.க பாடசாலை), வி.கயமுகி ஐயாத்துரை (யா/சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்), பாலரூபினி செல்வரத்தினம் (யா/அனலைதீவு தெற்கு அ.த.க பாடசாலை), அற்புதமலர் ஐயாத்துரை ( மு/விசுவமடு மகா வித்தியாலயம்), திலகேஸ்வரி கணபதிப்பிள்ளை (கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை), சிவாஜினி சிவகுருநாதன் (வவு/தவசியாகுளம் அ.த.க பாடசாலை), திரு.விமலேந்திரன் பாரதிதாஸ் (மன்/அடம்பன் மத்திய மகா வித்தியாலயம), பாஸ்கரன் கிறிஷாந்தி (யா/ எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை), பாலநளினி பாலசுப்பிரமணியம்__(கிளி/தருமக்கேணி அ.த.க பாடசாலை), சகாதேவன் தர்சினி (கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம்), பத்மநாதன் பாஸ்கரன்(யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலம்),

குணதர்ஷிகா குணசிங்கம் (வவு/பெரியமடு அ.த.க பாடசாலை), யோகேஸ்வரன் நிமலன் (யா/போக்கட்டி அ.த.க பாடசாலை), ஜெயராஜா மகிழினி (கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம), நாராயணநாதன் ஜெயராசா (கிளி/பூநகரி நல்லூர் அ.த.க பாடசாலை), அனுஜா வரதராசா (வவு/மாறாவிலுப்பை அ.த.க பாடசாலை), தியாகராஜ சர்மா உமாசுதக்குருக்கள் (வவு/சண்முகானந்தா வித்தியாலயம் (சேமமடுக்குளம்), சுமதி சிவபாதம் (வவு/திருஞானசம்பந்தர் வித்தியாலயம), அனுஜா நடேசு (மு/கற்சிலைமடு அ.த.க பாடசாலை), ஜனார்த்தன் சசிதா (கிளி/புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம), கௌசலா தனலிங்கம் (மன்/ வாழ்க்கைப்பட்டான் கண்டல் றோ.க.த.க பாடசாலை),

சின்னையா சிவராசா (வவு/ஒலுமடு அ.த.க பாடசாலை), இரத்தினசிங்கம் கோகுலன் (யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம), மனோகரன் நிருபன் (யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம), சிவசம்பு பத்மநாதன் (யா/ஆழியவளை சீ.சீ.த.க பாடசாலை), சிவாஜினி எதிர்வீரசிங்கம் (யா/கட்டுபுலம் அ.த.க பாடசாலை), நளினி இரத்தின சிங்கம் (வவு/கோயில்குஞ்சுக்குளம் வித்தியாலயம), சாருபா சரவணபவான் (வவு/பெரியமடு அ.த.க பாடசாலை), நிரஞ்சனா கேதீஸ்வரன் (வவு/புளியங்குளம் இந்துக் கல்லூரி), மகேந்திரன் ஜெயந்தன் (வவு/முதலியார்குளம் றோ.க.த.க பாடசாலை), மாறன் ரதிவதனி (கிளி/அக்கராயன் மகா வித்தியாயலயம்), அஜந்தா சிவலிங்கம் (வவு/சுந்தரபுரம் அ.த.க பாடசாலை),

நடராசா முரளிதரன் (கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம்), ஜேம்ஸ்__ யோசப் றஜன் (மன்/அடம்பன்.மத்திய மகா வித்தியாலயம), தெய்வேந்திரன் அஜேந்திரன் (கிளி/அக்கராயன் அ.த.க பாடசாலை), மேரி மெலானி டயானா மரியநாயகம் (மு/மல்லாவி மத்திய கல்லூரி), பரராசசிங்கம் ஜெயராசசிங்கம் (கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம), சுந்தரம் அருட்செல்வம் (யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை), செல்லன் பதீஸ்ராசா (மு/மாங்குளம் மகா வித்தியாலயம), சிறி ரரீமச்சந்திரன் மயூரதி (யா/குடத்தனை அ.த.க பாடசாலை), அஜந்தினி கனகரட்ணம் (வவு/ திருஞானசம்பந்தர் வித்தியாலயம்),

பாலசுந்தரன் முகுந்தன் (வவ்ு/ ஆண்டியாபுளியங்குளம் அ.மு.க பாடசாலை), இராஜநாயகம் பிரதீபன் (யா/கரம்பை அ.மி.த.க பாடசாலை ( வரணி) கௌரிமனோகரி சிவப்பிரகாசம் (யா/கரம்பன் சண்முகானந்தா மகா வித்தியாலயம), மகாதேவன் மணிவண்ணன் (மு/விசுவமடு மகா வித்தியாலயம), வில்சன் பியந்தன் (கிளி/ஜெயபுரம் அ.த.க பாடசாலை), யோகானந்தம் கிருபாகர்ன் (வவு/நெடுங்கேணி மகா வித்தியாலயம்), நடராசா தமிழ்ச்செல்வன் (யா/இருதிடல் அ.த.க பாடசாலை), இரத்தினம் காண்டீபன் (மன்/முள்ளிக் குளம் றோ.க.த.க பாடசாலை), சிவபாக்கியம் சிறீதரன் (யா/துன்னாலை தெற்கு அ.த.க பாடசாலை), சுப்பிரமணியம் கணேஸ்வரன் (மன்/கருங்கண்டல் றோ.க.த.க பாடசாலை), சிவசுப்பிரமணியம் சிவசங்கர் (வவு/ பட்டிக்குடியிருப்பு அ.த.க பாடசாலை), யோகேந்திரம் தயாபரன் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை),

கோமதி ஜெயானந்தசர்மா (வவு/ பாரதிபுரம் பாரதி வித்தியாலயம்), சச்சிதானந்தன் சிவசங்கர் (யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலை), யசோதா பரம்சோதி (வவு/மாறாவிலுப்பை அ.த.க பாடசாலை), அனோஜா தில்லைநாதன் (யா/தொண்டைமானாறு மகா வித்தியாலயம), சுபாஷினி நாகேந்திரராசா (மன்/இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை), அணிமொழி சிவகுமார் (யா/நாரந்தனை கணேசா வித்தியாலயம), ஞானபாக்கியம் றெஜினோல்ட் ஞானேந்திரன் (கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம), அனுஷா தர்மலிங்கம் (வவு/அறபா வித்தியாலயம்), கமலசிங்கம் கஜீரன் (யா/சித்தி விநாயகர் மகா வித்தியாலயம (புங்குடுதீவு) வனிதா இராசலிங்கம் (யா/பொலிகண்டி இ.த.க பாடசாலை), தவபாலினி பாலசுந்தரம் (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம), சசிலலிதா சிறிசேனா (கிளி/பூநகரி ஸ்ரீ விக்கி னேஸ்வரா வித்தி),

கிருஷ்ணபிள்ளை சிவானந்தன்- ஓமந்தை மத்திய கல்லூரி, பிரியதர்சினி நாகேந்திரன் -சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், தமயந்தி துரைராசா- அக்கராயன் அ.த.க பாடசாலை, இராசேந்திரம் செசிலியன் சுகந்தராஜ்-முக்கொம்பன் அ.த.க பாடசாலை, பாலசுப்பிரமணியம் கிருபாகிருஷ்ணன் - அடம்பன்.மத்திய மகா வித்தியாலயம், குமுதினி இராசேந்திரம்- முதலியார்குளம் றோ.க.த.க பாடசாலை, கஜேந்தினி லஜன் -உடுத்துறை மகா வித்தியாலயம், தேன்மொழி செல்வராசா- புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், ஆனந்தி நவரத்தினம்- ஜெயபுரம் அ.த.க பாடசாலை, தனுஷியா விக்கினேஸ்வரமூர்த்தி -அம்பன் அ.மி.த.க பாடசாலை, சுகன்யா புஷ்பாங்கதன்- குளவிசுட்டான் அ.த.க பாடசாலை,

அனுஷியா சின்னப்பொடியன்-சரவணை சின்னமடு றோ.க.த.பாடசாலை, சுபாஜினி சந்திரசேகரம்-வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், மாதினி வல்லிபரம்-வேலணை கிழக்கு மகா வித்தியாலயம, ஆன்ஷோபனா அன்ரனி- கட்டுக்காரன் குடியிருப்பு றோ.க.த.க பாடசாலை, இராமலிங்கம் இராமேஸ்-இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை, அருமைநாதன் ராயுகுமார் -சண்முகானந்தா வித்தியாலயம் (சேமமடுக்குளம்), மயில்வாகனம் ரூபதன் -பூம்புகார் கண்ணகி வித்தியாலயம, நளாயினி சிவலிங்கம் -இருதிடல் அ.த.க பாடசாலை, அதிமுத்துலிங்கம் வைகுந்தன்- வற்றாப்பளை மகா வித்தியாலயம, காயத்திரி நித்தியானந்தன்-ஸ்கந்தபுரம் இல 02 அ.த.க பாடசாலை, சுந்தரலிங்கம் கலைவினோதன்- கேரவில் அ.த.க பாடசாலை, தம்பிமுத்து தேவகுமார்- மாதர்பணிக்கர் மகிழங்குளம் அ.த.க பா., பிரபாகரன் திருச்செல்வி-தருமக்கேணி அ.த.க பாடசாலை, டினேஸ் பிராங்கிலின் சர்மிலா- கனகராயன்குளம் மகா வித்தியாலயம்,பாலசிங்கம் அஜந்தகுமார்- ஓமந்தை மத்திய கல்லூரி, சுபாசினி கார்த்திகேசு-கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை,சோமசுந்தரம் கிருஷ்ணாம்பிகை- சின்னத்தம்பனை அ.த.க பாடசாலை, பர்னாந்து கமிலஸ்-புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்,

சிவகரன் பிரணவசொரூபி- ஸ்ரீ நாகபூசணி வித்தியாலயம, வினோதினி தேவராசா-கிறிஸ்தோகுளம் அ.த.க பாடசாலை, நாகராஜா நாவேந்தன்-அக்கராயன் மகா வித்தியாயலயம், தம்பிரத்தினம் தர்சன்-ஓமந்தை மத்திய கல்லூரி, தாரிணி செல்வராசா-பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம்,இராசையா சிறீதரன்-ஊரி அ.த.மகா வித்தியாலயம்(காரைநகர்),கமலலோசினி சுப்ரமணியம்-முழங்காவில் மகா வித்தியாலயம்,கார்த்திகா நாகராஜா-கனகபுரம் மகா வித்தியாயலயம்,தினேஸ்சுதன் கிமாலினி-தவசியாகுளம் அ.த.க பாடசாலை,பிரணவன் சுபாஷினி-முத்தையன்கட்டு வலது கரை அ.த.க பாடசாலை,

இராசதுரை இராகோபால்-அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயம்,அன்ரனிராஜன் மேரிதிரேசா-ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம,அன்ரனி கிறிஸ்றி-வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்,குமாரசாமி யோகன்ராஜ்-கிளிநொச்சி இந்துக்கல்லூரி,பாலசுப்பிரமணியம் வசீகரன-குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலை,பத்மினி திருஞானசம்பந்தமூர்த்தி-புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்,சுரேஸ்குமார் கோமதி-பூநகரி ஸ்ரீ விக்கிஸேஸ்வரா வித்தி,சிவனந்தினி நடராசா-முத்தையன்கட்டு வலது கரை அ.த.க பாடசாலை,யோகநிதி நல்லசிவம்பிள்ளை-ஆசிகுளம் அ.த.க பாடசாலை,நடராசசிங்கம் செந்தூரன்-கெருடாவில் இ.த.க.பாடசாலை,மென்மொழி தங்கவடிவேலு-அக்கராயன் அ.த.க பாடசாலை,

ரகுநாதன் சந்திரகாசன்- நெடுங்கேணி மகா வித்தியாலயம், ரதி நவரத்தினம்- முழங்காவில் மகா வித்தியாலயம், துசியந்தன் சுமந்திரா -மண்டைதீவு மகா வித்தியாலயம், முருகேசு விஜயகுமார்- துன்னாலை மேற்கு மெ.மி.த.க பாடசாலை, சூரியவதனா திருச்செல்வம்மகாலிங்கம் -கல்நாட்டினகுளம் அ.த.க பாடசாலை,டோசி கேதீஸ்குமரன் -கனகாம்பிகை குளம் அ.த.க பாடசாலை, மகேஸ்வரலிங்கம் கங்கா -கண்ணகையம்மன் வித்தியாலயம், கலை

(11 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று ஒரு தகவல்

## பேச்சு

"அந்த ஆளுக்குப் பேசத் தெரியாது. அவரிடம் கொஞ்சம் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள்" என்று சொல்வதுண்டு.

அப்படியானால் என்ன அர்த்தம்?

அவருக்கு நாகரிகமாக பேசத்தெரியவில்லை என்று அர்த்தம்.

பேசுவது என்பது மனிதனால் மட்டுமே முடியக்கூடிய காரியம். அப்படியிருந்தும் அதன் பெருமையை அவன் இன்னும் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அதனால்தான் அவன் அளவுக்கதிகமாக வார்த்தைகளை கொட்டி விடுகிறான். அதன் பின்னர் அதையெல்லாம் திருப்பி அள்ள முடியாமல் கிடந்து கஷ்டப்படுகிறான். கொட்டிய வார்த்தைகளை அள்ள முடியுமா?

ஒருவனை இன்றைக்கு "முட்டாள் என்று திட்டி விடுகிறீர்கள் நாளைக்கு மறுபடியும் அவரிடம் போய் நேற்று உன்னை முட்டாள் என்று சொல்லிவிட்டேன். அந்த வார்த்தையை திருப்பிக் கொடு வாங்கிக்கொண்டு போய் விடுகிறேன் என்றா சொல்ல முடியும் ?

ஒரு பையனைப் பார்த்து "அது வாயுள்ள பிள்ளை... பிழைத்துக்கொள்ளும்!" என்றால் மற்றவர்களுக்கெல்லாம் வாயே இல்லை என்றா அர்த்தம்? அப்படியில்லை!

அந்தப் பையன் , கொஞ்சம் கெட்டிக்காரத் தனமாக பேசுவான் என்று அர்த்தம்.

எப்படிப்பேச வேண்டும்? அது தான் இன்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியது.

இதற்கு எட்டு விதமான குறிப்புகளை நம் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பேச்சுக்கு எட்டு அங்கங்கள் உண்டு என்று அவர்கள் சொல்கிறார்கள்.

உண்மை , அன்பு, நிதானம், இனிமை ஆழம், சமயமறிதல், சபையறிதல் இந்த எட்டு தன்மையும் பேச்சில் இருக்க வேண்டுமாம். இதையே சிலபேர் விபரமாக எழுதி வைத்திருப்பார்கள்.

- உண்மையே பேசுக!
- நன்மையே பேசுக!
- அன்பாகப் பேசுக!
- நிதானமாகப் பேசுக!
- இனிமையாகப் பேசுக!
- ஆழமுடையதாக சிந்தித்துப் பேசுக!
- சமயம் அறிந்து பேசுக!
- சபையறிந்து பேசுக!

இந்த எட்டு அம்சமும் பொருந்தி இருந்தால் தான் அது பேச்சு! பேசுவதெல்லாம் பேச்சாகி விடாது! பேச்சு ஒரு சிறந்த கலை! எல்லாவற்றையும் விட பேசாமல் இருந்தும் பழக வேண்டும். அது மிக முக்கியம். உண்மையை பேச வேண்டும்.

சத்தியத்துக்கு மதிப்பு கொடுத்தவர்களைத் தான் சரித்திரம் மதிக்கும்! உண்மை பேசினால் மட்டும் போதாது... அந்த உண்மையில் நன்மை கலந்திருக்கவேண்டும்.

ஒரு கொலைகாரனுக்குப் பயந்து கொண்டு ஒருவன் உங்கள் வீட்டுக்குள் ஒழிந்திருக்கிறான். அந்த முரடன் கையில் அரிவாளோடு வந்து "அவன் இங்கே வந்தானா?" என்று உங்களிடம் விசாரிக்கிறான்.

"உண்மைதான் உயர்வு தரும்" என்று நினைத்துக் கொண்டு "ஆமாம்! உள்ளே தான் ஒழிந்து இருக்கிறான். போய்ப் பிடித்துக் கொள்ளுங்கள்!" என்றா சொல்வீர்கள். அது நன்மையில்லாத உண்மை. அதனால் பிரயோசனமில்லை. அதே மாதிரி உங்கள் பேச்சில் அன்பு இருக்க வேண்டும். நிதானம் இருக்க வேண்டும் – இனிமை இருக்க வேண்டும்– சிந்தித்துப் பேசவேண்டும்.

சமயமறிந்து பேசுவதும் முக்கியம் அதைப்பற்றி நமக்கு வேறு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை!

அவையறிந்து பேசும் திறமை பேச்சாளர்களுக்கு மிக அவசியம். அது இல்லையென்றால் நிலைமைபரிதாபமாக ஆகிவிடும்! ஒரு பேச்சாளர் மும்முரமாக பேசிக்கொண்டிருந்தார். சபையில் இருந்தவர்களெல்லாம் எழுந்து போய் கொண்டே இருந் தார்கள். கடைசியில் இரண்டுபேர்தான் பேசும் வரை கவ னித்துக்கொண்டு இருந்தார்கள்.

பேச்சாளர் அவர்களைப் பார்த்து "எனக்கு கூட்டம் முக்கியமில்லை நீங்கள் இரண்டு பேராவது ஊக்கமாக என்னை கவனித்துக்கொண்டு இருக்கிறீர்களே அது போதும்" என்றார். இதை கேட்டதும் உட்கார்ந்திருந்த இரண்டு பேரில் ஒருவர் எழுந்து...

"அப்படி இல்லை! நாங்கள் இருவரும் நீங்கள் பேசி முடிந்தவுடன் தொடர்ந்து பேசவேண்டியவர்கள் அதற்காகத் தான் உட்கார்ந்திருக்கிறோம். சீக்கிரம் முடியுங்கள்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடநூல்களை முழுமையாக திருப்பி வழங்கும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்ட இலவச பாடநூல்களை சேதமாக்காமல் முழுமையாக திருப்பி வழங்கும் போது அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார அறிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களை கிரமமாக ஒரே தினத்தில் வழங்கும் நோக்குடன் இன்றைய தினத்தை பாடப்புத்தக விநியோகத் தினமாக தேசிய மட்டத்தில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாடப்புத்தக விநியோக வைபவங்கள் பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படும் எனவும் சகல மாணவர்களுக்கும் இன்று பாடப் புத்தகங்கள் கிடைப்பதை அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் பணித்துள்ளார்.

இந்த ஆண்டு பாடப்புத்தகங்களை உரிய முறையில் சிறப்பாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்திய மாணவர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு வகுப்பில் இருந்தும் தலா 3 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு பாடப்புத்தக விநியோக வைபவத்தின் போது சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன. இதற்குத்தேவையான சான்றிதழ்களை கல்வி வெளியிட்டுத் திணைக்களம் பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பிவைத்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பண்டாரமேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சான்றிதழ்கள் போக்குவரத்துப்பிரச்சினைகளால் திருகோணமலையில் உள்ள வடக்கு மாகாண கல்வித்திணைக் களத்திலுள்ளதாக மாகாணகல்விப்பணிப்பாளர் வீ.ராசையா தெரிவித்துள்ளார். (5)

# பிரிட்டனுக்கு கல்வி பயில வரும் மாணவர்களுக்கு புதிய நடைமுறை

## அடுத்த ஆண்டு முதல் அமுல்

(கொழும்பு)

அடுத்தவரும்முதல்(மார்ச்2009) ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்கு வெளியே இருந்து வரும் மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு இணைத்துக்கொள்வதில் புதிய நடைமுறையொன்று பின்பற்றப்படும் என பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேற்படி பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு,

**போலி கல்வி வழங்குநர்கள் மீது UK கடும் நடவடிக்கை**

இலங்கை மாணவர்கள் பலர் வேறு பல கார ணங்களுக்காகவும் தமது உயர்கல்வி ஐக்கிய இராட்சியத்தை தெரிவு செய்கின்றனர். நூற்றுக்கணக்கான எயர் கல்வி நிறுவனங்கள் கணக்கியல் தொடக்கம் விலங் கியல் வரைக்கும் உலக தரத்தில் கற்கை நெறிகளை வழங்குவதால் மாணவர்களுக்கு வெற்றிகரமான எதிர்காலம் உண்டு ஐக்கிய இராட்சியம் பிற நாட்டு மாணவர்களுக்கு இந்த அனுபவத்தை வழங்கக் கடமைப்பாடு கொண்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு UK போடர் எஜன்ஸி(UKBA) கடந்த ஒக்டோபர் 30ஆம் திகதியன்று அவுஸ்திரேலிய மாதிரி புள்ளிகள் முறையொன்றினை மாண வர்களுக்கு வழங்கியுள் ளது.

இப்புதிய முறையின் பிரகாரம் எதிர்வரும் மார்ச் (2009) மாதத்திலிருந்து ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்கு வெளியே யிருந்து வரும் மாணவர் களை சேர்க்க விரும்பும் உயர்கல்வி நிறுவனங்கள் UKபோடர் ஏஜன்ஸி யிடமிருந்து ஒரு விசேட உரிமத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

இதன் பின்னரே வெளி மாண வர்கள் சேர்த்துக் கொள்ளப் படலாம். மார்ச் மாதம் தொடங்க விருக் கும் இப் புதிய நடை முறையின்படி இதற்கு விண் ணப்பிக்க விரும்பும் கல்வி வழங்குநர்கள் 2009 பெப்ரவரி 2ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

இப்புதிய முறைமை யின் பிரகாரம் ஒரு தகுந்த உரிமத்தைக் கொண்டுள்ள கல்வி நிறுவனம் ஒன்றிற்கு பிற நாடுகளின் மாணவர்கள் விண்ணப்பிப்பதை உறுதி செய்யமுடியும் இதனால் பிற நாடுகளின் மாணவர்களால் போலி நிறுவனங் கள் அனுகூலமடைவது கட்டுப்படுத்தப்படும் .

அதேவேளை மிகுதரம் வாய்ந்த மாணவர்கள் தொடர்ந்தும் பிரிட்டனின் உயர் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். 2005 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து பல்கலைக் கழகங்கள் திணைக்களத்தினால் சுமார் 300 வரையிலான போலி கல்லூரிகள் கண்டு பிடிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளன.

2009 மார்ச் மாதத்திலிருந்து பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- பிறநாட்டு மாணவரை சேர்க்கும் உயர்கல்வி நிறுவனங்கள் உத்தரவாத உரிமம் பெறுதல் அவசியம்.
- ஒவ்வொரு மாணவரும் உரிமம் பெற்ற உத்தரவாதியை கொண்டிருக்க வேண்டும்.
- கல்வித்துறையில் தக்க சாதனைகள் புரிந்ததுடன் மிகக் கூடிய தகுதிகள் நிதித்தகுதிகளுடையவ்ருக்கே விசா அனுமதி வழங்கப்படும்.

அனுமதி பெற்ற கல்லூரிகளுக்கு வராமலிருத்தல் பத்து பருவங்களுக்கு தோற்றாமலிருத்தல் என்பவற்றிற்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் .

உத்தரவாத முகாமைத்துவ முறைமை (SMS) ஒன்று அவசரகால நடவடிக்கைகளை கவனிக்கும். விசாக்கள் வழங்குவதில் ஏய்ப் புக்களுக்கு இடமளிக்காத முறைகள் பேணப்படும்.

இதேவேளை அனுமதி பெற்று கற்று பட்டதாரிகளாகுபவர்கள் பிரிட்டனில் இரண்டு வருடங்கள் தொழில் புரிவதற்கு அனுமதிக்கப்படுவர்.

பிரிட்டனின் பட்டப்படிப்புகள் உலகம் முழுவதிலும் மதிப்புப் பெற்றவை அவை விலைமதிப்பு குறிக்கப்படக் கூடிய வையல்ல. ஒரு (UK) பட்டதாரி தனக்கென தானே தீர்மானங்களைச் செய்பவராக இருப்பார் . மேலதிக தகவல்களை இந்த இணையத் தளத்தில் பார்க்கலாம்.

www.bia.homeoffice.gov.uk

ஒ

# இராசி பலன்

*04.12.2008*
*(கார்த்திகை 19 ,வியாழக்கிழமை)*
*அவிட்டம் முன்னிரவு 9.39 மணிவரை*
*சஷ்டி முற்பகல் 9.22 மணிவரை*
*இராகுகாலம் 1.46-3.16 மணிவரை*
*சுபநேரம் 7.46-09.16 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | அதிகபிரயாசை, காரிய நன்மை, சுபநிகழ்வு, தூரதேசச்செய்தி. |
| இடபம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு அச்சமான நிலை, புதிய திட்டமிடல். |
| மிதுனம் | ஆரோக்கியக்குறைவு, வீண்பகை, முயற்சி தடங்கல், போசன சுகம். |
| கடகம் | தெய்வதரிசனம், அபூர்வ சந்திப்பு, கலந்துரையாடல், காரிய அனுகூலம். |
| சிங்கம் | சுகவாழ்வு , திடீர் பயணம், பண வருவாய், உறவினர் சந்திப்பு. |
| கன்னி | மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம், குடும்பக்கவலை, வீண்செலவு. |
| துலாம் | தன்னம்பிக்கைக்குறைவு, கல்வியில் ஆர்வம், ரோகநிலை காரிய தாமதம். |
| விருச்சிகம் | வாக்கு மேன்மை, அந்நியர் சந் திப்பு, பொருள் சேர்க்கை தெய்வ தரிசனம் |
| தனுசு | பணக்குறைவு, தொழில் மந்த நிலை, மரியாதைக்குறைவு, முயற்சிதாமதம் |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், பெரியோர்சந்திப்பு , தெய்வதரிசனம். |
| கும்பம் | பிதா சிந்தை, கோபப்படுதல், பண விரயம் , திடீர் பயணம். |
| மீனம் | தெய்வ தரிசனம், தொழில் நன்மை , மனமகிழ்ச்சி , காரிய நன்மை. |

வளவன்

## மணி விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை அதிபர் "வித்தியா விஜய ஸ்ரீ சம்மனய" செல்லர் சிவநடராசாவின் மணி விழா நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் உப அதிபர் செல்வி ந.பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன், வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

ஆசியுரையை சிவஸ்ரீ பால.பாலமனோன் குருக்கள் நிகழ்த்துவார். (ஓ-6)

## விஞ்ஞான தினப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் பருத்தித்துறைக் கல்விக் கோட்ட மாணவர்களுக்கு நடாத்தப்படும் விஞ்ஞான தினப் போட்டிகள் இன்றும் நாளை மறுநாளும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை தரம் 8,9, 11க்கான போட்டிகளும் நாளை மறுநாள் சனிக்கிழமை தரம் 6,7, 10 க்கான போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன.

தமிழ் மொழி மூலம் மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகளும், ஆங்கில மொழி மூலமான மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டிகளும் நடாத்தப்படுகின்றன.

பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை இவ்விஞ்ஞான தினப் போட்டிகளின் பரிசளிப்பு விழா நடை பெறும்.

இப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் உப - மாகாண மட்டக் கணித விஞ்ஞானப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன. (ஓ-52)

## வலுவிழந்தோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடாத்தும் உலக வலுவிழந்தோர் தின விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் இந்துத் தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ. இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிகழ்வின் வரவேற்புரையை பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. இராஜலிங்கமும் நன்றியுரையை விசேட கல்விப் பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகர் ந. சந்திரிக்காவும் நிகழ்த்துவார். அத்துடன் மாற்று ஆற்றலுள்ள மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறும். (ஓ)

# குடாநாட்டில் 'நிஷா' அனர்த்தத்தினால் விவசாயத்துறையில் அழிவு 1500 மில்லியன் ரூபாய்

### யாழ்.அரச அதிபர் தகவல்


(யாழ்ப்பாணம்)

'நிஷா' புயல்காற்று, மழையினால் யாழ். குடாநாட்டில் விவாயத்துறையில் ஆயிரத்து 500மில்லியன் ரூபாய் மதிக்கத் தக்க அழிவு ஏற்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதில் நீர்ப்பாசனத் துறையும் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் ஏற்பட்ட 'நிஷா' புயல் காற்று, மழையினால் ஏற்பட்ட விவசாயத் துறையின் அழிவுகள் குறித்து கமநல சேவைகள் திணைக்களம், விவசாய சம்மேளனங்களினால் வழங்கப்பட்ட பெறுமதியில் நீர்ப்பாசனத்துறை உட்பட ஆயிரத்து 500 மில்லியன் ரூபாய் பெறுமதியான அழிவு ஏற்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி அனர்த்தத்தினால் யாழ்.குடாநாட்டில் மீன்பிடித்துறைக்கு 300 மில்லியன் ரூபாய் பெறுமதியான அழிவு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட யாழ். அரச அதிபர் க.கணேஷ் மேலும் அழிவுகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (ஓ-5)



புலோலி புற்றளை மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினரான யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் மாணவரொருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:பரு.நிருபர்)

### பரு.பிரதேச செயலக பிரிவில்

# வீடுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களை விண்ணப்பிக்குமாறு அறிவிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் கடந்த வாரம் ஏற்பட்ட புயலுடன் கூடிய மழையினால் வீடுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி அனர்த்தத்தினால் வீடுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது பிரிவு கிராம சேவையாளரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று உரியவாறு நிரப்பி விண்ணப்பிக்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ் விண்ணப்பங்களின் அடிப்படையில் உரிய வீடு பருத்தித்துறை பிரதேச செயலக மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்படுமெனவும் அவர் கூறினார்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் கடந்த வாரம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலிருந்த குடும்பங்கள் வீடுகளுக்கு திரும்புவதாகவும் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ஓ-5)





## இசைப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்.நகரில் நடைபெறவுள்ள கைத்தொழில் மற்றும் கல்விக் கண்காட்சியின் ஒரு பகுதியாக கலாசார நிகழ்வைப் பிரதிபலிக்கும் வகையில் இசைப் போட்டியொன்று நடாத்தப் படவுள்ளது.

இப்போட்டிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாஸ்திரிய இசைப் புலமையுள்ள, தாமாகவே பாடல்களை உருவாக்கிப் பாடக்கூடிய 15-30 வயது வரையான இருபாலாரும் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்று எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு வலி.மேற்கு பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-6)

## வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகள்

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் 180 குடும்பங்கள் வீடுகளுக்கு செல்லமுடியாத நிலையில் வேறிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு வேண்டிய அத்தியாவசிய உதவிகள் பிரதேச செயலகத்தினாலும் தொண்டு நிறுவனங்களினாலும் வழங்கப்படுகின்றன என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (ஓ)



25 ஆம் திகதி வீசிய 'நிஷா' புயல் காற்றினால் சங்குவேலி தெற்கு ஆவரம்பிட்டியில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயத்தின் மேல் விழுந்திருக்கும் அரசமரம்.

## கால்நடை இழப்புகளை பதிவு செய்ய நடவடிக்கை

(வட்டுக்கோட்டை)

வெள்ள அனர்த்தம் காரணமாக இறந்த கால் நடைகள் பற்றிய விபரங்களை வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய நிலையம் மேற்கொண்டு வருகின்றது.

அவ்வாறு கால்நடைகளை இழந்தவர்கள், பண்ணைப் பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், இழப்புகள் பற்றி கிராம சேவையாளரால் உறுதிப்படுத்திய கடிதத்துடன் வந்து பதிவுசெய்து கொள்ளுமாறு வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி தி. பிரபாகரன் கேட்டுக் கெள்கின்றார். (ஓ)

## பிரியாவிடை வைபவம்

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 வரை கல்வி கற்று வேறு பாடசாலைகளுக்குச் செல்லவுள்ள மாணவர்களுக்கான பிரியாவிடை வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை11 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் அருட்பணி பே.பெனிக்னஸ் அடிகளார் தலைமையில் நன்றிப் பிரார்த்தனை இடம்பெறும். (ஓ)

## "காந்தீயம்" வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகார பூர்வ ஏடான "காந்தீயம்" பத்திரிகையின் ஒக்ரோபர்- நவம்பர் மாதங்களுக்கான இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழை இலவசமாகப் பெற்றுக் கொள்ள விரும்பின் ரூபா 5 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட, சுயமுகவரி எழுதப்பட்ட நீண்ட தபால் உறையைஆசிரியர் , "காந்தீயம்" ,வாணி கணனிப் பதிப்பகம் ,இல 61B , 1ஆம் குறுக்குத்தெரு , வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும் என்று இதழாசிரியர் எம். ஷாந்தன் சத்திய கீர்த்தி தெரிவித்துள்ளார். (ஓ)

## சைவபரிபாலன சபை பரீட்சை முடிவுகளும் விண்ணப்பங்களும்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் 2008 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், சித்தாந்த பண்டிதர் பரீட்சைகளுக்கான முடிவுகள் சித்தியடைந்தவர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டிற்கான பரீட்சைகள் 2009 மே மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று, பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு யாழ். சைவ பரிபாலன சபை தேர்வுச் செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ஓ)

## கற்றல் உபகரணம் வழங்கல்

புத்தூர்ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினர் கல்லூரியில் கல்வி கற்கும் பொருளாதார வளம் குறைந்த மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்க முன் வந்துள்ளனர்.

இதுதொடர்பான வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ஓ)

## வீதி மணலை அள்ளி வியாபாரம் செய்கின்றனர்

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள கேராணி வத்தை ஒழுங்கையில் வெள்ளம் பாய்ந்த பின் எஞ்சியிருக்கும் மணலைச் சில விஷமிகள் திருடிச் செல்வதாகக் கவலை தெரிவிக்கப் படுகிறது.மணல் விலை அதிகரித்திருப்பதால் இம் மணலை அள்ளி வியாபாரம் செய்வதில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு சூழலைப் பாதிக்கும் செயற்பாடுகளை நிறுத்துவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமெனச் சமூக ஆர்வலர்கள் வேண்டியுள்ளனர். (ஓ)

# இலங்கையில் தமிழர் 2

பொதுவாழ்விடம், பொது முன்னோர்கள், பொதுமொழி, பொதுப் பண்பாடு அல்லது வழக்கங்கள், பொது நம்பிக்கைகள் அல்லது சமயம், தம்மை வேறாக அடையாளம் காணல், தம் குழுவை வேறுபடுத்தும் பெயர், தம் குழுவின் தோற்றத் தையும் வரலாற்றையும் விளக்கும் ஒரு பொதுத் தோற்றக் கதை (அல்லது கட்டுக்கதை). இத்தகைய ஒரு வரைவிலக்கணம் இலங்கையின் இனக் குழுக்கள் பற்றிய ஆய்வுக்கு பயனுள்ளதாக அமைகின்றது.

இன்றைய உலகில் ஒருவர் தன்னை ஒரு குறிப்பிட்ட இனக்குழுவைச் சேர்ந்தவராகக் கொள்ளும்போது, இத்தகைய அடையாளம் காணல், அவருடைய சொந்தக் கண்ணோட் டத்தின் விளைவே அதாவது, ஒருவர் தன்னை எக்குழுவைச் சேர்ந்தவராக அடையாளம் காண்கின்றாரோ அக்குழுவைச் சேர்ந்தவராக பிறரும் அவரை அடையாளம் காண்பார்.

இத்தகைய தன்னோக்கு (Self -Perception) இனக் குழுக்களையும் தனி மனிதர்களையும் அடையாளம் காண உதவும் ஒரு வழிமுறை எனலாம்.

எனினும் இனக் குழுக்களை பிறர் அடையாளம் காண்பதற்கு உதவும் சில வழிகாட்டிகள் இருப்பதை மறுக்கமுடியாது. இவற்றை எப்பொழுதும் பயன்படுத்தி ஒரு வர் இனக்குழுவை இலகுவில் அடையாளம் காணலாம் என்று கூறமுடியாது. எடுத்துக் காட்டாக, ஒருவர் பேசும் மொழி பெரும் பாலும் அவருடைய அடையாளத்தை காண உதவும் ஒரு வழிகாட்டி எனலாம்.

எனினும் எவரைப் பொறுத்தும் இது ஒரு பொருத்தமான வழிகாட்டி என்று கூறுவ தற்கில்லை. சிங்கள மொழிபேசும் ஒருவர் சிங்கள இனக் குழு வைச் சோந்தவர் என்று இலகுவாக அடை யாளம் காணமுடி யும்.

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஓரினக் குழுவைச் சேர்ந்தவரல்லர். அவர்கள் மூன்று முக்கிய குழுக்களைச் சேர்ந்வராவர்: இலங்கைத் தமிழர் , இந்திய வம்சாவளித் தமிழர், இலங் கை முஸ்லிம்கள்.

ஒவ்வொரு குழுவும் தன்னை வேறான குழுவாக அடையாளம் கண்டுகொள்கிறது. கொழும்புச்செட்டிகள் என்றபெயரைக் கொண்ட இன்னொரு சிறு குழுவினர் இருபதாம் நூற்றாண்டில் இறுதித் தசாப்தங்கள் வரை தம்மை இலங்கைத் தமிழர் என்ற இனக் குழுவைச் சேர்ந்தோராகக் கருதி வந்திருந் தும், இப்பொழுது தம்மை வேறான ஒரு குழுவாகக் கருதிக்கொள்ள விரும்புவதைக் காணலாம். தமிழ்பேசுவோர் எல்லோரும் தமிழர் அல்லர் என்பதை உணர்த்தும் வகையில் தமிழ்பேசும் இலங்கை முஸ்லிம் கள் தம்மை வேறான இனக்குழுவாகக் கருதுவர். தமிழைத் தாய் மொழியாகக் பேசாத சிலர் தம்மை தமிழராகக் கருதுவ தையும் நோக்குமிடத்து, தமிழ்மொழி தமிழர் இனக்குழுவை அடையாளம் காண உதவும் வழிகாட்டியாக எப்போதும் இருப்பதில்லை எனக் கூறலாம்.

### இந் நூலின் உட்பொருள்

இலங்கை வரலாற்றின் தொடக்க நூற் றாண்டுகளில் வாழ்ந்த தமிழர்கள் பற்றியும் , இலங்கையின் வடக்கு, வடமேற்கு, மற்றும் கிழக்குப் பகுதிகளில் தமிழ்பேசும் ஒரு சமூகம் உருவாகிய வரலாறு பற்றியும் ஆய்வு செய்வதே இந் நூலின் நோக்கம். இலங் கைத் தமிழர் என்ற இனக்குழு உருவாகிய வரலாற்றுடன் பக்கம் பக்கமாக இலங்கை யின் பிற பகுதிகளில் சிங்கள மொழி பேசும் ஓர் இனக்குழு உருவாகிய வரலாறு எடுத்துக் கூறப்படுகின்றது.

இக்காலத்தில் காணப்படுவதைப் போல வே ஆதிகாலத்திலும் இனக்குழு வேறுபா டுகள் இருந்தன என்று கூறமுடியாது. ஆதியில் இருந்த இனக்குழுக்கள் இன்றைய இனக்குழுக்களிலிருந்து வேறுபட்ட பண்பு களைக் கொண்டவை.

ஆதிக் கல்வெட்டுக் களில் 'தமெட', 'இள', 'பரத' போன்ற இனக் குழுப் பெயர்கள் காணப்படுகின்றன. ஒன்றிலிருந்து இன் னொன்றை வேறுபடுத்தும் பண்புகள் ஒவ்வொரு இனக்குழுவுக்கும் இருந்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

இவற்றை இன்று இலகுவில் அறிந்துகொள் வதற்குச் சான்றுகள் போதா. மொழி என்பது இனக்குழுக்களை வேறுபடுத் தும் ஒரு பண் பாக இருந்தது என்று கூறுவது கடினம். அதாவது, ஒரு மொழியைப் பேசுவோர் அனைவரும் இணைக்கும் காரணியாக இன்றுபோல் இனக்குழு உணர்வு ஆதி இனக்குழுக்களுக்குள் இருந்தது என்று கூறுவது கடினம். (தொடரும்)




வல்வெட்டித்துறை நகராளுமன்ற உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழாவில் பிரதம விருந்தினரான யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி எம்.வசந்தகுமார் நகராளுமன்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி எஸ். சாந்தினியினால் மலர் மாலையணிவித்து வரவேற்கப்படுவதையும், நகராளுமன்றச் செயலாளர் தலைமை உரை நிகழ்த்துவதையும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள் நகராளுமன்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு பொன்னாடை போர்த்துவதையும், உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களை வல்வெட்டித்துறை தபாலதிபர் எஸ்.செல்வராஜா வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பரு.நிருபர்)

# சமூக நிறுவனங்களுக்கான நிர்வாகமும் முகாமைத்துவமும் 9

### 3.1.1 CBO வின் செயற் திட்டத்தின் காலவரையறை



பொதுவாக பல சமூக அடிப்படை அமைப்புகள்(CBOs) மன தில் எழும்வினா வானதுநாங் கள் மூன்று மாதத்திற்கு திட்மிடுவதா? அல்லது ஆறு மாதத் திற்கு திட்ட மிடுவதா? அல்லது அதை விடக்கூடிய காலப் பகுதிக்கா? என்பதாக இருக்கும். இவ் வினா விற்கு விடையளிப்பது அவ்வளவு இலகுவா னதல்ல. எவ்வாறாயினும் இவ்வமைப்புக்க ளில் ஒரு தடவையில் தெரிவு செய்யப்படும் நிர்வாகக் குழு ஒரு வருடத்திற்கு பதவியில் இருப்பதனால் செயற் திட்டத்தினையும் ஒரு வருடத்திற்குத் தயாரித்துக்கொள்வது சிறந் தது. நன்கு வளர்ச்சி அடைந்த அமைப்புக் கள் ஒரு வருடத்திற்கு மேலும் திட்டமிடுவது, ஆரம்ப கட்டத்திலும் ஓரளவு வளர்ச்சியடைந்த நிலையிலும் உள்ள அமைப்புக்கள் ஒரு வருடத்திற்கான திட்டம் போதுமானது.

இவ்வாறு சமூக மட்ட நிறுவனங்கள் தங் கள் ஒரு வருடத்திற்கான திட்டத்தை வடிவ மைத்த பின்னர் அதன் அடிப்படையில் காலாண்டு மற்றும் மாதாந்த காலப் பகுதிக் கான உப திட்டங்களாகப் பிரித்துக் கொள்ள லாம். இதன் மூலம் குறுகியகாலப் பகுதியி லேயோ தமது பெறுபேறுகளை மீளாய்வு செய்வதுடன் பலவீனங்களையும் பகுப்பாய் செய்து திடத்திலுள்ள பலவீனமான அம்சங் களை நீக்கி ஏற்பட்ட பின்னடைவை அடுத்த காலப் பகுதிக்குள் சரிசெய்யக் கூடிய வகை யில் எதிர்காலத் திட்டத்தை மாற்றியமைக்க முடியும். இவ்வாறு ஒரு வருடத்திற்குரிய திட்டத்தை மாதாந்த, வாராந்த திட்டமாகப் பிரிப்பதற்குத் திட்டமிடும்போது ஒவ்வொரு குறுகிய காலப் பகுதியின் முடிவிலும் அக் காலப் பகுதிக்கான திட்டத்துடன் பெற்ற பெறு பேறுகளை ஒப்பீடு செய்து மீளாய்வு செய்து அடுத்த காலப் பகுதிக்கான திட்டங்களை வகுக்கவேண்டும். இல்லையெனில் அவ்வாறு செய்யப்படும் வாராந்தம் மற்றும் மாதாந்த திட்டங்களினால் எவ்வித பலனுமில்லை.

### 3.1.2 வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்தல்

ஒரு வருடத்திற்குள் அமைப்பினால் செய்து முடிக்க வேண்டியுள்ள பொறுப்புக் களின் அடிப்படையாகக் கொண்டு ஒரு வருடத்திற்கான செயல் திட்டத்தை அபிவி ருத்தி செய்யலாம். ஒரு வருடத் திட்டமானது காலாண்டு, மற்றும் மாதாந்தம் செய்யப்பட வேண்டிய பிரதான நடவடிக்கைகள் மற்றும் காலவரையறை என்பவற்றைச் சுட்டிக்காட் டும். உதாரணமாக ஒரு விவசாயிகளின் அமைப்பின் சேதன விவசாயத் திட்டத்தின் கீழ் நிலத்தைப் பண்படுத்தல் மற்றும் அடிக் கட்டுப் பசளையிடல் என்பன இரண்டாம் காலாண்டுப் பகுதியில் செய்யப்பட வேண் டும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும், ஆனால் அது சரியாக எந்த மாதத்தில் எந்த வாரத்தில் செய்து முடிக்கப்பட வேண்டும் என்பது அதில் குறிப்பிடப்பட்டிருக்காது.

நாம் இந்த ஒரு வருடத்திற்கான திட்டத்தை மாதாந்த திட்டமாக பிரிக்கும்போது குறித்த வேலையை குறித்த மாதத்தின் எந்த மாதத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அந்த மாதத்திலோ அடுத்த மாதத்திலோ எந்த வாரத்தில் முடிக்கப்பட வேண்டும் என்பதை அது தெளிவாகச் சுட்டிக்காட்டும். அத்தோடு இத் திட்டத்தின் உபசெயற்பாடுகளையும் , அது தொடர்பான தகவல்களையும் பிரதி பலிக்கும் .மேலும் இதை வாராந்த திட்டமாக விரிவுபடுத்தும் போது வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் செய்யப்படவேண்டிய வேலை களை இனங்காண உதவும். நீண்ட காலத்திற் குரிய திட்டங்களை மேலும் விரிவுபடுத்தி குறுகிய காலப் பகுதிக்குரிய நடவடிக்கை களை இனங்கண்டு திட்டங்களை உருவாக் கும் போது ஒவ்வொருவரும் தங்கள் கடமை களைச் சரியாக விளங்கிக் கொண்டு உரிய காலத்தில் தமது பங்களிப்பை நிறைவு செய்ய வழிகாட்டியாக அமைவதுடன் நேர இழப் பைக் குறைக்கவும் வளங்கள் விரயமாவது தடுக்கவும் முடியும்.

பொதுவாக சமூக மட்ட நிறுவனங்கள் இரண்டு விதமான வேலைத் திட்டங்களைத் தயாரிக்க வேண் டிய தேவை உள் ளது. அமைப் பின் பொது வான நிர்வாக முகாமைத்து வத்திற்கான திட்டம், மற்றையது கருத் திட்டத் தினை நடைமுறைப்படுத்துவதற்கான செயற் திட்டம். முகாமைத்துவத் திட்டமானது அமைப் பின் நிர்வாகச் செயற்பாடுகள், அமைப்பின் பொது வேலைத்திட்டங்கள் என்பவற்றை உள்ள டக்கியதாக இருக்கும். ஆனால் கருத் திட்டங் களுக்குரிய செயற்திட்டமானது ஒவ் வொரு கருத் திட்டத்தினைத் திட்டமிடுவதில் இருந்து நடைமுறைப்படுத்தி நிறைவு செய்து வரை யான செயற்பாடுகளை உள்ளடக்கிய தாக குறிப்பிட்ட குறுகிய காலத்திற்கோ வரையறுக் கப்பட்டிருக்கும். நீண்ட கால கருத் திட்டமாக

தி.திருசாந்
SOND நிறுவனம்
யாழ்ப்பாணம்

இருப்பின், அச் சந்தர்ப் பத்தில் செயற்திட்ட மும் அக்காலப் பகுதி முழுவதை யும் உள்ள டக்குவதாக இருக்க வேண்டும். கருத்திட்டங் கள் 3 மாத காலப் பகுதிக்கு வரை யறுக்கப் பட்டதாகவும் இருக்கலாம். அல்லது 3வருட காலத்திற்குரியதாகவும் இருக்கலாம். இவ்வா றான சந்தர்ப்பங்களில் கருத்திட்டத்திற் கான செயற்திட்டமும் அமைப்பின் நிர்வாகச் செயற் பாடுகளுக்கான செயற்திட்டமும் ஒன்றோ டொன்று முரண்படாத வகையில் ஒத்திசை வானதாக இருக்க வேண்டும். (தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## மாதிரி வினாத்தாள் -06 கணிதம் - I


நேரம் :- 2 மணித்தியாலம்

### பகுதி - A


வினா இல I இல் இருந்து 10 வரை ஒரு புள்ளி வீதம் 10 புள்ளிகளும் வினா இல II இல் இருந்து 30 வரை இரண்டு புள்ளிகள் வீதம் 40 புள்ளிகளும் வழங்கப்படும்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**


1. சுருக்குக. $3-0.02$
2. $1kg\ 50g$ ஐ g இல் தருக.
3. $8:20$ என்பதனை எளிய விகிதமாகத் தருக.
4. $x$ ஐக் காண்க.





5. தீர்க்க. $\frac{x}{2}=-3$
6. சுருக்குக. $\frac{3}{5}-\frac{2}{5}$
7. $x$ இன் பெறுமானம் காண்க.





8. நேர்ச்சுட்டியாக மாற்றுக. $2x^{-3}$
9. $A=\{a,e,i,o,u\}$ A யின் முதலிமை யாது?
10. காரணிப்படுத்துக. $3x+3$
11. சுருக்குக. $3\sqrt{3}-\sqrt{12}$
12. விரித்தெழுதிச் சுருக்குக. $(3x+1)^2$
13. சுருக்குக. $\frac{2}{x}-\frac{3}{2x}$
14. $z=a+bc$ இல் C ஐ எழுவாயாக மாற்றுக.
15. நேர்கோடு AB யின்
    (i) வெட்டுத்துண்டு யாது?
    (ii) படித்திறன் யாது?





16. $x$ இன் பருமனைக் காண்க.





17. கூட்டுக. $101_{இரண்டு}+11_{இரண்டு}$
18. தீர்க்குக. $3^{2x-1}=9$
19. உருவில் O வட்டத்தின் மையம். தரப்பட்ட அளவுகளுக்கமைய
    (i) $x$ ஐக் காண்க.
    (ii) $y$ ஐக் காண்க.





20. உருவில் வட்டத்தின் மையம் O உம் ஆரை 13cm உம் நாண் AB யின் நீளம் 24cm உம் எனின், O இலிருந்து AB யிற்கான கிட்டிய தூரம் யாது?





21. $a^2-b^2=30$ உம் (a -b) = 5 உம் ஆயின் (a+b) இன் பெறுமானம் யாது?
22. உருவிலுள்ள தரவுகளுக்கமைய $x$ ஐக் கணிக்க.




23. உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கமைய y இன் பெறுமானம் காண்க.





24. நபர் ஒருவரது மாத வருமானம் பங்கிடப்பட்ட விதத்தை அருகேயுள்ள பை வரைபு காட்டுகின்றது.




(i) வேறு தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியின் ஆரைச்சிறைக் கோணம் யாது?
(ii) கல்விக்குரிய செலவு ரூபா 6000 எனின் உணவுக்கான செலவு யாது?

25. $5\leq 7-2x$ என்ற சமனிலியைத் தீர்த்து தீர்வை எண்கோட்டில் வரைபுபடுத்துக.
26. கைக்கடிகாரமொன்றை ரூ 1700 இற்கு விற்பதனால் 15% நட்டம் ஏற்படுகின்றது எனின் அதன் கொள்விலை யாது?
27. $\begin{pmatrix}3 & x\\ y & 4\end{pmatrix}+\begin{pmatrix}2 & 1\\ 1 & 3\end{pmatrix}=\begin{pmatrix}5 & 8\\ 4 & 7\end{pmatrix}$ எனின் $x$, y இன் பெறுமானங்களைக் காண்க.
28. 8cm ஆரையுடைய வட்டத்தின் மையத்திலிருந்து 2cm தூரத்தில் அசையும் நாணின் நடுப்புள்ளியின் ஒழுக்கைப் பருமட்டான படம் வரைந்து காட்டுக.
29. 1cm இனால் 2km ஐக் குறிக்கும் அளவிடைக்கு வரையப்பட்ட அளவிடைப் படம் ஒன்றை உரு காட்டுகின்றது.
    (i) A யிலிருந்து O இன் திசைகோள் யாது?
    (ii) OA யின் உண்மை நீளம் யாது?





30. மாணவர் குழு ஒன்றிலுள்ள 4 மாணவர்களினது இடை நிறை 65kg ஆகும். அவர்களுடன் மேலும் ஒரு மாணவன் சேர்க்கப்பட்டால் இடைநிறை 61kg ஆகும். 5 ஆவது மாணவனின் நிறை யாது?

### பகுதி – B


**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**(ஒரு வினாவிற்கு 10 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 50 ஆகும்.)**

1. குறித்த தொகைப் பணத்தில் $\frac{1}{3}$ பங்கை தமது மகளுக்கும் $\frac{1}{6}$ பங்கை மகனுக்கும் கொடுத்து எஞ்சியதில் $\frac{1}{3}$ பங்கை ஒரு வியாபாரத்தில் முதலீடு செய்கிறார்.
   (i) 3, 6 இன் பொ.ம.சி காண்க.
   (ii) மகனுக்கும், மகளுக்கும் கொடுத்த மொத்தப் பங்கு யாது?
   (iii) எஞ்சிய பங்கு யாது?
   (iv) முதலீடு செய்த பங்கு யாது?
   (v) எஞ்சிய பங்கு ரூ. 10,000 எனின் ஆரம்பத்தில் அவரிடம் இருந்த பணம் எவ்வளவு?
2. உருவில் OA = 21cm. OA, OB இன் நடுப்புள்ளிகள் முறையே D, C ஆகும். $A\hat{O}B=60^0$
   (i) உருவில் AB யின் நீளம் முழுவட்டத்தின் என்ன பின்னம்?
   (ii) உருவில் AB யின் நீளம் யாது?
   (iii) நிழற்றிய பகுதி ABCD இன் சுற்றளவு யாது?
   (iv) நிழற்றிய பகுதி ABCD இன் பரப்பளவு யாது?




3. ஆரையின் இரு மடங்கு உயரமான உருளை வடிவப் பாத்திரம் ஒன்றை படம் காட்டுகிறது. உயரம் 28cm எனின்,
   (i) ஆரை யாது?
   (ii) இப்பாத்திரத்தின் அடிப்பரப்பு யாது?
   (iii) 10.5cm ஆரையுடைய கோளத்தின் கனவளவு யாது?
   (iv) இக்கோளம் முற்றாக நீர் நிரம்பியுள்ள மேற்படி உருளை வடிவப் பாத்திரத்தினுள் முற்றாக அமிழ்த்தப்பட்டால் பாத்திரத்தில் எஞ்சியிருக்கும் நீரின் கனவளவு யாது?




4. ஒரு துடுப்பாட்ட வீரன் தான் பங்கு பற்றிய துடுப்பாட்டப்போட்டிகளில் பெற்ற ஓட்டங்களின் விபரம் தண்டு - இலை வரைபில் காட்டப்பட்டுள்ளது.
   (i) பங்குபற்றிய போட்டியாளர்களின் எண்ணிக்கை யாது?
   (ii) வீச்சு யாது?
   (iii) இடையம் யாது?
   (iv) காலணை இடைவீச்சு யாது?

| தண்டு | இலை |
|---|---|
| 0 | 0 2 |
| 1 | 5 8 9 |
| 2 | 0 5 6 |
| 3 | 0 5 5 |
| 4 | 5 7 |
| 5 | 0 5 |

5. $\in=\{0,1,2,3,4,5,6,7,8,9\}$
   A= {x:x முதன்மை எண்கள்}
   $B=\{2,4,6,8\}$
   (i) $n(B)$ யாது?
   (ii) தொடை A ஐ மூலகங்களுடன் தருக.
   (iii) $A\cap B$ ஐ மூலகங்களுடன் எழுதுக.
   (iv) $A'$ இன் மூலகங்களை எழுதுக.
   (v) $A\cup B$ இன் மூலகங்களை எழுதுக.
   (vi) A இன் தொடைப் பிரிவுகள் எத்தனை?

# யாழ்ப்பாணம், மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழிக்கடைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் -2009

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2009 ஆம் திகதி முதல் 31.12.2009 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி நீங்கலாக) | - ரூ.400.00 |
| கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி | -11.12.2008, மு.ப.10.00 மணிவரை |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | -11.12.2008, நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | -11.12.2008, பிற்பகல் 2.30 மணிக்கு |

விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடதுபக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு 11.12.2008 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

*குறிப்பு:*

இவ்விடயம் தொடர்பான 03.11.2008 ஆம் திகதியிடப்பட்ட விளம்பரத்தில் வெளியிடப்பட்ட அனைத்துக் குறிப்புக்களும் இவ் விளம்பரத்திற்கும் பொருந்தும் என்பதுடன், ஆரம்ப கேள்வித் தொகையிலும் பார்க்கக் குறைந்த கேள்வி சமர்ப்பிப்பவர்களினதும், கேள்வி சமர்ப்பித்து சித்திபெற்றும் குத்தகை உரிமம் பெற்றுக்கொள்ளாதவர்களினதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

| தொ இல. | பொதுச் சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (15% பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 02. | பெரிய கடை மரக்கறிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 1500000.00 |
| 05. | நாவாந்துறைச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 450000.00 |
| 06. | புங்கங்குளம் சந்தை | 2000.00 | 10000.00 |
| 07. | அரியாலைச்சந்தை | 1000.00 | 100000.00 |

| தொ இல. | இறைச்சிக் கடைகள் | கடை இல. | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (15%பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.04 | 5000.00 | 115000.00 |
| 02. | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5000.00 | 40000.00 |
| 03. | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 120000.00 |
| 04. | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 140000.00 |
| 05. | அரியாலை மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 195000.00 |
| 06. | அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 40000.00 |
| 07. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 110000.00 |
| 08. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.04 | 5000.00 | 70000.00 |
| 09. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.05 | 5000.00 | 70000.00 |
| 10. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.06 | 5000.00 | 70000.00 |
| 11. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.07 | 5000.00 | 70000.00 |
| 12. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.08 | 5000.00 | 70000.00 |
| 13. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.09 | 5000.00 | 70000.00 |
| 14. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.10 | 5000.00 | 10000.00 |
| 15. | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.11 | 2000.00 | 10000.00 |
| 16. | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.12 | 2000.00 | 10000.00 |
| 17. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.07 | 7000.00 | 100000.00 |
| 18. | முஸ்லிம் கல்லூரி ஆட்டிறைச்சிக் கடை | | 5000.00 | 25000.00 |
| 19. | நரியன்குன்று மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 7000.00 | 85000.00 |

மு.செ.சரவணபவ,
மாநகர ஆணையாளர் ,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

*மாநகர அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*01.12.2008*

(C/1816)


# சமுர்த்தி பயனாளிகளின் சிறார்களுக்கு புலமைப்பரிசில்

சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் சிறார்களுக்கு புலமைப் பரிசில் வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்காக ஆயிரம் சிறார்கள் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப் படவுள்ளனர். இப் புலமைப் பரிசிலுக்கான தெரிவானது இந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் புலமைப் பரிசிலுக்காக தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 400 ரூபா வீதம் அடுத்த வருடம் முதல் வழங்கப்படவுள்ளதோடு 10 மாதங்களுக்கு தொடர்ச்சியாக இப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# ரணில் விக்கிரமசிங்க மீது ஊடக அமைப்புகள் கண்டனம்



(கொழும்பு)

டெய்லிமிரர் பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் பிரதி ஆசிரியர் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்துக்கள் கண்டிக்கப்பட வேண்டியவை என ஊடக அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

டெய்லி மிரார் பத்திரிகைக்கு விடுத்த அச்சுறுத்தலை எதிர்க்கட்சித் தலைவர் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சனத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

பலவீனமான தலைவர் என டெய்லி மிரர் பத்திரிகையில் வெளியான கட்டுரை குறித்து ரணில் விக்கிரமசிங்க காரசாரமான விமர்சனத்தை வெளியிட்டிருந்தார்.

ஊடகங்களுக்கு எதிராக எந்ததரப்பிலிருந்தேனும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டால் அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் எனவும், அவை கண்டிக்கப்பட வேண்டியவை எனவும் ஐந்து ஊடக அமைப்புக்கள் கூட்டாக இணைந்து அறிக் கை வெளியிட்டுள்ளன.

மேலும், அரசியல்வாதிகளைப் போன்றே ஊடகநிறுவனங் களும் பக்கச்சார்பற்ற வகையில் செயற்பட வேண்டியது அவசியம் எனக் குறித்த ஊடக அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ஓ-6)

# போர் நடவடிக்கையால் கிளிநொச்சியில் பெருமளவான வீடுகள் அழிவடைந்துள்ளது

(கொழும்பு)

இலங்கைப் படையினரின் போர் நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 56ஆயிரத்து 552 வீடுகள் அழிவடைந்துள்ளதாக கிளிநொச்சி அரசசெயலகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

தெடர்ச்சியான போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் அமைதிச் சூழல் நிலவிய காலத்தில் பெருமளவான பணத்தினைச் செலவு செய்து வீடுகளை அமைத்திருந்தனர்.

இந்நிலையில் இலங்கைப் படையினர் மேற்கொண்டுள்ள போர் நடவடிக்கை காரணமாக 56 ஆயிரத்து 552 வீடுகள் அழிவடைந்துள்ளதாக புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

கிளிநொச்சி நகரத்திலேயே கூடுதலான வீடுகள் அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# நோர்வேஜியன் எயிட் நிறுவனம் இலங்கையிலிருந்து வெளியேறத் தீர்மானம்

## நிறுவன பொதுச்செயலர் பீட்டர் எய்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அதிகாரிகள் தமது அமைப்பைத் தொடர்ந்து அச்சுறுத்தி வருவதுடன், அசௌகரியங்களையும் ஏற்படுத்தியதாக நோர்வேஜியன் பீப்பல்ஸ் எயிட் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயற்படவில்லை எனக் குற்றம் சுமத்தி, இலங்கையில் இருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தாம் வெளியேறத் தீர்மானித்துள்ளதாக நோர்வேஜிய எயிட் நிறுவனத்தின் பொதுச் செயலர் பீட்டர் எய்ட் தெரிவித்துள்ளார்.

நோர்வேஜிய உதவி அமைப்புக்கு கடந்த பல காலங்களாக இலங்கை அரசாங்கத்தினாலும் அதிகாரிகளினாலும் திட்டமிட்டபடி எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

நோர்வேஜிய உதவி நிறுவனம் வடக்கு, கிழக்கில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

இதில் கிளிநொச்சியிலேயே கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்டன. நோர்வேஜிய எயிட் நிறுவனம் 1939ஆம் ஆண்டு நோர்வேயின் தொழிலாளர் அமைப்பினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (ஓ-6)

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 06.12.2008 முதல் 08.12.2009 வரை

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம், 1-ஆம் பாதம் வரை
(பெயரின் முதல் எழுத்துக்கள் யே, யோ, ப, பி, பு, பூ, பா, ன, டே உள்ளவர்களுக்கும்)

### இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும்!

சாரசரி மனிதராய் பிறந்து சாதனையாளராக திகழும் தனுசு ராசி நேயர்களே!

இதுவரை உங்கள் ராசியிலேயே சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது இரண்டாமிடத்தில் சஞ்சரித்து இல்லத்தில் நல்ல சம்பவங்களை வரவழைத்துக் கொடுக்கப்போகிறார். நல்ல காரியங்கள் பலவற்றையும் அவர் நடத்தி கொடுத்தாலும் அவர் வலிமை இழந்து சஞ்சரிப்பதால் ஆரோக்கியம் உங்களுக்கு ஒத்துழைப்புச் செய்யுமா? என்பது கேள்விக் குறிதான்.

சுகாதிபதியாகவும் குரு விளங்குவதால் உத்யோகத்தில் திடீர் மாற்றம் தொழிலில் திடீர் திருப்பம் என்று ஏதாவது ஒன்றை ஏற்படுத்தலாம். ஒரு பக்கம் வளர்ச்சியும், ஒரு பக்கம் தளர்ச்சியும் ஏற்படுத்தும் இந்த குருவை குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே பூஜித்து வழிபட்டால் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். பதவி மாற்றங்கள் முதல் பலவித மாற்றங்களை வழங்கும் இந்த குரு, ஜென்மத்தில் இருந்த காலத்தில் எதையும் திருப்தியாக செய்திருக்காது. இப்பொழுது இரண்டில் சஞ்சரிக்கும் பொழுது உங்கள் ஆசைகளை நிறைவேற்றும் விதத்தில் அது உலா வரப்போகிறது.

### உள்ளத்தால் அன்பு செலுத்தி உலகத்தை வசமாக்குபவர்கள்

இரக்க சிந்தனையால் எல்லோர் மனதிலும் இடம் பிடிப்பவர் நீங்கள் எடுத்த காரியத்தை எப்பாடுபட்டாவது முடித்துவிடுவீர்கள். சிறப்பான வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமானால், திருமண காலத்தில் முக்கிய பொருத்தங்கள் மூன்று அவசியம் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் தாரத்தாலும், தனயனாலும் தொல்லைகள் ஏற்படாது.

நவகிரகங்களில் நல்ல கிரகம் என்று வர்ணிக்கப்படும் குரு உங்கள் ராசிக்கு அதிபதியாக விளங்குவதால் ஒரு வாய்ப்பு நழுவிச் சென்றாலும் மற்றொரு வாய்ப்பு தானாகவே தேடி வரும் உதவி செய்து உதவி செய்தே உள்ளத்தில் இடம்பிடித்து பதவியைப் பெற்றுக் கொள்வீர்கள்

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி தரும் மாற்றங்களைப் பற்றி பார்ப்போம்.

முப்பெரும் பார்வையால்
ஏற்படும் முன்னேற்றம்!
இரண்டில் குரு வந்தால்
இல்லத்தில் மகிழ்ச்சி வரும்!
திரண்ட செல்வ முடன்
தேனான வாழ் வமையும்!
உறவினர்கள் பகை மாறி
உற்சாகம் குடிகொள்ளும்!
குருவின் வழிபாட்டால்
கொள்கையுடன் வாழ்ந்திடலாம்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் ஒருவர் கொள்கை பிடிப்போடு வாழ்ந்தால் அவரை உலகம் பாராட்டும். அங்ஙனம் வாழ்ந்து காட்டுவதற்கும், சொன்ன சொல்லை நிறை வேற்றுவதற்கும் குருவின் சஞ்சாரம் குடும்பஸ்தானத்தில் இருக்க வேண்டும்.

கோச்சார ரீதியாக குரு இரண்டாமிடத்திற்கு வருவதால் ஆச்சரியப்படத்தக்க அளவிற்கு முன்னேற்றங்கள் ஏற்படும். பெற்றோர், பிள்ளைகள், பேரன், பேர்த்திகள் என்ற உறவில் இருந்த சிக்கல்கள் அகலும். பிள்கைளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

குரு நீச்சம் பெற்று வலிமை இழப்பதால் குரு ப்ரீதி செய்ய வேண்டியது அவசியமாகும். யாகங்களிலும், அன்னதான வைபவங்களிலும் கலந்து கொள்ளலாம். கூட இருக்கும் சான்றோர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ளலாம்.

### விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை

உங்கள் ராசிநாதன் குரு நவக்கிரகங்களில் நல்ல கிரகம் என்று வர்ணிக்கப்படுவர் அதன் பார்வை பதியும் இடங்களான 6, 8, 10 ஆகிய இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. எனவே எதிர்ப்பு, வியாதி, கடன், இழப்பு, தொழில், முன்னேற்றம், செயல், தன்னம்பிக்கை அனைத்து பொறுப்புகளும் குருவின் கையில்தான் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் குருப்பெயர்ச்சிக்கு பின்னர் நல்ல மாற்றங்கள் உருவாகும்.

6-ஆம் இடத்தை குரு பார்ப்பதால் கடன் சுமை குறைவதற்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் .கனிவோடு பேசி காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். இடமாற்றம், ஊர்மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும் என்றாலும் சுய ஜாதகத்தில் பயண ஸ்தானம் வலுவாக இருந்தால் உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

குருவின் பார்வை அஷ்டம் ஸ்தானத்தில் பதிவதால் உடல் நலம் சீராகும். இதுவரை எத்தனையோ இடத்தில் வைத்தியம் பார்த்தும் நோய் தீரவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது சாதாரண வைத்தியத்தின் மூலமே சர்வரோகமும் குணமானது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

குருவின் பார்வை 10-ஆம் இடத்தில் பதிவதால் அயல்நாட்டு அழைப்புகளை ஒரு சிலர் ஏற்றுக்கொள்ளும் அமைப்பு உருவாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம் வாங்கிக்கொண்டு சுய தொழில் செய்யும் முயற்சியில் ஈடுபடுவார்.

### நாலுக்கு அதிபதி இரண்டில்

சுகஸ்தானம், குடும்பஸ்தானம் ஆகியவற்றுக்கு அதிபதியான குரு இரண்டில் நீச்சம்

ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்

பெறுவதால் சொத்து விற்பனையால் ஆதாயம் கிடைக்கும் கட்டிய வீட்டால் கடன் சுமை கூடு கிறதே என்று கவலைப்பட்டவர்கள் அதை விற்று விட்டு புதிய வீடு வாங்குவதில் ஆர்வம் காட்டுவர். தாயின் உடல் நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

### தந்தை வழியில் அனுகூலம் கிடைக்கும் நேரம்

(6.12.2008 முதல் 19.1.2009 வரை)

சூரியன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும் தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றிக்கொள்வீர்கள் பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி காண்பீர்கள். பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளுக்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். மாற்றினத்தவர்களும் வேற்று மொழி பேசுபவர்களும் உங்கள் மகத்தான முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்புச் செய்வர்.

### ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய நேரம்

(20.1.2009 முதல் 21.3.2009 வரை)

சந்திரன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது சந்தர்ப்பங்கள் சில கை நழுவிப் போகலாம். கூட்டாளிகளோடு கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. ஏமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்க எதிலும் முன்எச்சரிக்கையோடு நடந்து கொள்வது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். வழக்குகள் வாயில் தேடி வந்து சேரும். உறவினர்கள் செய்த உதவிக்கு நன்றி காட்ட மாட்டார்கள். மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்காமலிருக்க சிறப்பு ஸ்தலங்களுக்கு யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது.

### விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும் நேரம்

(22.3.200 9 முதல் 8.12.2009 வரை)

செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சரிப்பதால் குடும்பத்தில் அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை வாங்கி மகிழ்வீர்கள் பிள்ளைகள் முன்னேற்றம் கருதி பெரும் தொகையொன்றை செலவழிக்க நேரிடும். உடன்பிறப்புகள் உங்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர் என்று நம்ப முடியாது. ஒரு சிலர் பகை வந்து விலகலாம். பாகப்பிரிவினைகள் திருப்தியாக இருக்காது.

1.5.2009 முதல் 15.8.2009 வரை கும்பத்தில் குரு சஞ்சரிப்பதால் வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வளர்ச்சிக்கு வித்திட்ட நண்பர்கள் வந்திணைவர். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் உருவாகும். திருமணக் கனவுகள் நனவாகும். கட்டடம் வாங்கும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

### கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய நேரம்

(29. 6.200 9முதல் 12.11.2009 வரை)

குரு வக்ரகதியில் இயங்கும் இக்காலத்தில் அதிக விரயங்கள் ஏற்படலாம். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் மேலோங்காமலிருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. மருத்துவச் செலவு கூடும் .மனதில் இனம் புரியாத கவலை மேலோங்கும் உத்தியோகம் மற்றும் தொழில் உடனடி முடிபெடுக்கும் சூழ்நிலை அமையும் . புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பொழுது யோசித்து செய்வது நல்லது.

### தனுசு ராசி பெண்களுக்கு!

தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு சந்தோஷங்களை நாளும் சந்திக்கும் விதத்தில் இந்த குருப்பெயர்ச்சி அமையப்போகிறது. கருத்து வேறுபாடுகள் அகலும். கணவன் - மனைவிக்குள்; நெருக்கம் அதிகரிக்கும். நீங்கள் அடியெடுத்து வைத்த நேரம் அதிர்ஷ்டமாக இருக்கிறது. என்று புகுந்த வீட்டில் உங்கள் புகழ் பாடுவர். தொழில் பங்குதாரர்களில் உங்கள் பெயரும் இடம்பிடிக்கும். பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழாக்கள் முதல் பொன்னான திருமண வாய்ப்பு வரை கண்டு மகிழும் நேரமிது. வக்ர காலத்தில் ஆலய வழிபாடு உகந்தது. பௌணமி கிரிவலத்தின் மூலமும் பலன்களை அதிகம் பெறலாம். சுய ஜாதகத்தில் குருவின் சாரபலமறித்து தென்முகக் கடவுளை தேர்ந்தெடுத்து வழிபாடு செய்யுங்கள் நன்மைகள் நாளும் வந்து சேரும்.

### பலன் தரும் வழிபாடு

இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவால் இனிய பலன்களைக் காண சிவன் தெட்சிணா மூர்த்தியை அர்ச்சித்து வழிபட்டு வருவதோடு ஆலயத்திற்கு சென்று விநாயகர், அம்மன் , நந்தி, வராகி, ஆகிய தெய்வங்களை வழிபட்டு வாருங்கள். யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் யோகங்கள் வந்து சேரும்.

*வளரும்*

---

# இந்திய நிவாரணப் பொருட்கள் கிளிநொச்சியை வந்தடைந்தன

## விநியோகம் உடனடியாக ஆரம்பமாகும் என்கிறார் அரசாங்க அதிபர்

(கொழும்பு)

தமிழக மக்களினால் வன்னிப் பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கென அனுப்பிவைக்கப்பட்ட முதல் தொகுதி நிவாரணப் பொருட்கள் திங்கட்கிழமை மாலை கிளிநொச்சி தர்மபுரத்தை வந்தடைந்தன. இவை நேற்று முன்தினம் லொறிகளில் இருந்து முழுமையாக இறக்கப்பட்டுள்ளதாகவும் இதன் விநியோகம் உடனடியாக ஆரம்பமாகுமெனவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் களனியில் உள்ள அவர்களது களஞ்சிய சாலையில் இருந்து வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட இந்திய நிவாரணப் பொருட்களின் முதல்தொகுதி 50 லொறிகளில் திங்கட்கிழமை வன்னிப் பகுதிக்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

எனினும், 2 லொறி கள் வழியில் பழுதடைந்ததையடுத்து, 48 லொறிகள் மட்டுமே திங்கட்கிழமை தர்ம புரத்தை சென்றடைந் ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பொருட்கள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு நேரடியாக தங்களால் விநியோகம் செய்யப்படுமென செஞ்சிலு வைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அடுத்த தொகுதியாக மேலும் 50 லொறிகளில் இந்த உணவுப் பொருட்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இன்று அனுப்பி வைக்கப்படும் என வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

### முல்லையில் தொற்று நோய் பரவக்கூடிய அபாயம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் சீரற்ற கால நிலையினால் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் ஏற் பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் இம ல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

மழை வெள்ளம் காரணமாக பல்வேறு நோய் தொற்றுக்கள் பரவி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சிறுவர்கள் வயோதிபர்கள் இந்த தொற்று நோய் கிருமிகளினால் அதிகம் பாதிக்கப்படக்கூடும் என குறிப்பிடப்படுகிறது. (ஓ)

### இராமேஸ்வரம் மீனவர்கள் தாக்கப்பட்டு மீன்கள் பறிமுதல்

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த திங்களன்று 700இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் தங்கச்சிமடத்தை சேர்ந்த முருகன் ரோலன் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களிடமிருந்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இறால்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தங்கச்சிமடம் யோவான் என்பவருக்கு சொந்தமான படகில் இருந்த திசை காட்டும் கருவி, ஐஸ்பெட்டி மற்றும் மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 20ற்கும் மேற்பட்ட படகுகளில் இருந்த மீனவர்கள் தாக்கப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 5 இலட்சம் மதிப்புள்ள இறால்களும் பறிமுதல் செய்யப் பட்டுள்ளதாகவும் இந்த சம்பவத்தால் மீனவர்கள் பெரும் பீதி அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

ஒரு மனிதனுடைய செயல் அவனுடைய – பெருமை அல்லது சிறுமையின் உரைகல்.

– இந்தியா

வலம்புரி

## ஈழத்தமிழருக்கு ஆறுதல் தரும் இந்தியப் பிரதமரின் உறுதிமொழி

இலங்கையில் யுத்தத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை இந்தியாவின் தலையீட்டைத் தவிர வேறு எந்த வழியிலும் தீர்வு காணமுடியாது என்பது தெளிவான உண்மை.

அதேநேரம் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே வரலாற்றுத் தொடர்புகள் நிறையவே உண்டு.

அவ்வகையில் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு.

இந்நிலையில் இலங்கையில் யுத்த நிறுத்தம் செய்யப்படும் என இந்தியப் பிரதமர் அளித்த உத்தரவாதம் இலங்கை மக்கள் அனைவருக்கும் ஆறுதல் தருவதாகும்.

யுத்த நிறுத்தம் என்பது 'மீண்டும் யுத்தம்' என்ற பேச்சுக்கு இடம் தராது இருக்க வேண்டும்.

இது விடயத்தில் இந்தியா தெளிவாக இருப்பது அவசியம்.

யுத்த நிறுத்தம் செய்வதும் பின்னர் யுத்தம் தொடங்குவதுமான கடந்தகால அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு இனிவரும் காலத்தில் யுத்த நிறுத்தம் என்பது நிரந்தரமானதாக அமைவதற்கான ஏற்பாடுகளை இந்தியா செய்ய வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா கொண்டிருந்த அசமந்தப் போக்கு தவறானதென்பதை மும்பையில் இடம்பெற்ற அனர்த்தம் உறுதி செய்துள்ளது.

அதாவது இலங்கையில் யுத்தம் நீடிப்பது அண்டை நாடான இந்தியாவுக்கு ஆரோக்கியமானதல்ல என்பதே அந்த முடிபாகும்.

அதேநேரம் மும்பையில் இடம்பெற்ற அநாகரிகச் செயலை தென்னிலங்கையில் வெளிவரும் பத்திரிகைகள் சில மகிழ்வோடு வரவேற்ற விடயம் இந்தியாவை ஆத்திரமூட்டி விட்டுள்ளது.

எனவே ஒட்டு மொத்தத்தில் இலங்கை இன விவகாரத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டிய தேவை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கு மேலாக தமிழகத்தில் எழுந்துள்ள ஈழத்தமிழர் ஆதரவு அலைக்கு காத்திரமான மதிப்பை அளிக்கவேண்டிய தேவை இந்திய மத்திய அரசுக்கு உண்டு.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பைச் சரியான முறையில் தணிக்காதவிடத்து தமிழகத்தில் கூட தனிநாட்டுக் கோரிக்கை அரும்பலாம்.

அத்தகையதோர் நிலைமை ஏற்படுமாக இருந்தால் பாரததேசம் பல கூறுகளாக உடையும் அபாயம் ஏற்படும்.

எனவே இந்தியாவை வழிப்படுத்தும் 'றோ' அமைப்பு இதுவரை இந்திய மத்திய அரசைத் தவறான பாதையில் வழிப்படுத்தியிருந்தாலும் மும்பையில் இடம்பெற்ற மிக மோசமான படுகொலைகளுக்குப் பின்னர் றோவின் செயற்பாட்டில் இந்திய மக்களுக்கும், இந்திய மத்திய அரசுக்கும் நம்பிக்கை இல்லாது போய்விட்டது.

இந்தக் களநிலை இலங்கை மீதான இந்தியத் தலையீட்டை வலுவாக்கும் என்பது திண்ணம்.

# இன்றைய நிலை நீடித்தால் சோமாலியாவை விட மோசமாகலாம்

## சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வகட்சிக் குழுவில் ஆளும் தரப்பிலுள்ள கட்சிகளே அங்கம் வகிக்கின்றன. இதன் மூலமாக உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ள முடியும். மாறாக, தமிழ் மக்களையும் உலகத்தையும் முட்டாள்களாக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். இன்றைய நிலை நீடித்தால் அபிவிருத்தியில் சோமாலியாவை விட மோசமான நிலைக்கே நாடு தள்ளப்படும்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற மாகாண உள்ளூராட்சி சபைகள் மீதான விவா தத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

மத்திய அரசாங்கத்திலிருந்து மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும் மாகாண சபைகளுக்கென மத்திய அரசாங்கத்தில் அமைச்சொன்று இருக்கின்றது. எனினும் ,25 மாநிலங்களைக் கொண்ட இந்தியாவில் டில்லி அரசாங்கத்தில் மாநிலங்களுக்கென அமைச்சொன்று இல்லை.

மாகாண சபைகளுக்கென கொடுக்கப்பட்ட உரிமைகள், கடமைகளை மாகாண சபைகளே செய்யவேண்டும். எனினும், மாகாண சபைகள் அமைச்சு, மாகாண சபைகளுக்கான உரிமையையும் சலுகையையும் ஒடுக்கும் நிலையே காணப்படுகின்றது.

சகல ,மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டதே தவிர பகிரப்படவில்லை. இன்று 60 வருடங்களுக்குப் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணம் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றது. எனினும், நிவாரணத்திற்காகக் கையேந்த வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், மத்தியிலேயே குவிக்கப்பட்டுள்ளன. அதிகாரத்தின் பிரகாரம் சட்ட ஒழுங்கின் பிரகாரமும் மாகாண பொலிஸ் கோரப்பட வேண்டும். எனினும், முழுமையாக சிங்கள பொலிஸ் என்பதனால் எதுவுமே பேசப் படு வதில்லை.

உயர் கல்வியைத் தவிர ஒன்பது மாகாணங் ளுக்கும் ஒன்பது கல்விய மைச்சுகள் உள்ளன. மேலதிக மாகமத்திய அரசாங்கத்தில் நான்கு, ஐந்து கல்வியமைச்சுக்கள் இருக்கின்றன.

மாகாண சபைகளுக் கான அமைச்சு,மத்திய அரசாங்கத்திலிருந்து அதிகாரங்களை மாகாண அமைச்சுகளுக்கு பறித்து கொடுக்க வேண்டும்.

2400 கிராம சேவகர்களை அமைச்சர் நியமித்துள்ளார். உண்மையிலேயே இதனை மாகாண சபைகளே செய்திருக்க வேண்டும். கிராம மட்டத்தில் செய்ய வேண்டியவற்றைக் கூட மாகாண சபைகளுக்கு செய்ய முடியவில்லை.

சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் ஐ.தே.க. ஹெல உறுமய, ஜே.வி.பி. இல்லை. ஆளுங்கட்சியும்அதனுள் இருக்கின்ற கட்சிகளுமே இருக்கின்றன. இதன் மூலமாக உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ள முடியும். தமிழ் மக்களையும் உலகத்தையும் முட்டாள்களாக்க முடியாது.

தற்போதைய நிலை நீடித்தால் அபிவிருத்தியில் சோமாலியாவை விடவும் மோசமான நிலைக்கேடு தள்ளப்படும். கனடா, சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளின் சமஷ்டி முறைமைகளை பார்க்க முடியாதா?

நியாயமான தீர்வை முன்வைக்காது தமிழ் அரச சார்பு கட்சிகளைக் கொண்டு தமிழர்களை அடக்கி ஆளலாம் என்று நினைக்கக் கூடாது. (ஓ-6)

# இந்தியா இலங்கைக்கு எந்தவித போர் ஆயுதங்களையும் வழங்கவில்லை

## பிரணாப் முகர்ஜி தெரிவித்தார் என்கிறார் தங்கபாலு எம்.பி

(கொழும்பு)

இந்தியா இலங்கை அரசாங்கத்திற்கு எந்தவிதமான போராயுதங்களையும் வழங்க வில்லை என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். என்று தமிழக காங்கிரஸ் கட்சி தலைவரும் எம்.பியுமான கே.வி. தங்கபாலு எம்.பி கூறினார்.

இலங்கைப்பிரச்சினை தொடர்பில் தமிழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்பின் பின்னர் செய்தியாளரிடம் கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, இந்தியா இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய ஆயுதங்களை வழங்கி வருவதாக அரசியல் கட்சிகள் பலவும் விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் தெரிவித்துவருகின்றனர்.

ஆனால் இந்த குற்றச்சாட்டுக்களில் எந்தவித உண்மையும் இல்லை. இலங்கை அரசாங்கத்திற்கு இராணுவ உதவிகள் எதுவும் செய்யவில்லை என்பதுவே யதார்த்தமான விடயம்.

இலங் கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் நேற்று முன்தினம் பிரத மரைச்சந்தித்த பின்னர் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இது தொடர்பில் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்தியா எந்தவித ஆயுதங்களையும் இலங் கைக்கு வழங்கவில்லை என தெரிவித்துள்ளார் என்றார். (ஓ-6)


# பகவானின் நிழல்களே பஞ்சபூதங்கள்

நன்றும் தீதும் பிறர் தர வாரா.என்னுடைய தலையெழுத்தை நானே எழுதுகின்றேன். அதை நான் தான் அழிக்க வேண்டும். சொர்க்கமும் நரகமும் இவ்வுலகத்திலேயே காணப்படுகின்றது. சிந்தனைக்குரிய மனித மூளை வேறெங்கும் இல்லை. நாம் செய்த நல் வினை தீ வினையை நினைத்து உள்ளம் பூரிப்பதும் , நோவதும் இப்புவியிலே தான்.நாம் செய்யும் வினைப் பயனின் பயனை நாமும் அனுபவித்து மிகுதியை நமது சந்ததியும் அனுபவிக்க வேண்டும்.

இறைவன் தன் கடமைகளை ஒழுங்குறச் செய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை பஞ்சபூதங் களைப்படைத்து அவைகளிடம் ஒப்படைத்திருக்கிறார். பாவ புண்ணிய பலனை மனிதர்கள் அடைய அவைகளின் சேவைகள் முக்கியம் பெறுகின்றன. மனிதன் அறிந்தும் எத்தனையோ பாவங்களின் சூத்திர தாரிகளாக இருக்கின் றான். இதனைக் குறைப்பதற்காக எத்தனையோ ஆகம விதி முறைகளை மனிதனே ஆக்கியிருக்கிறான். காரணம் கோர மான தீச் செயல்களை செய்யாதிருப்பதற்காக ஆனால் இன்றைய மனிதன் உண்ட வீட்டிலேயே கன்னமிடுகிறான்.பெற்ற உதவியை உடன் மறந்து நன்றி கெட்டவனாகின்றான்.

மனிதன் செய்யும் அக்கிரமத்தால் பூமித்தாய் எவ்வளவு தூரம் எம்மைத் தாங்குவாள். நாம் செய்யும் பாவபாரமே பூமாதேவி அக்கினிக்குழம்பாகிறாள். பூ வாக இருக்கும் தென்றல் புயலாக அடிக்கின்றது. கங்கை கரை தாண்டுகின்றது. தன் மீது நடக்கும் அட்டூழியம் , அக்கிரமத்தை கழுவி, தான் சுத்த அடைய விரும்புகின்றாள். இது என்ன ஊழி அழிவா என்று உணராது இறைவனை நினையாது அவ்வேளையிலும் பாவத்தை செய்கின்றான். நாம் நம்மையே ஒரு நாள் நடுநிலையில் இருந்து முழுமையாக சிந்தித்தால் நம் பாவச்சுவடுகள் எத்தனை , புண்ணிய செயல்கள் எத்தனை என்று நாமே கணக்குப்போட்டுக்கொள்ளலாம்.

தவறு செய்யாத மனிதன் இல்லை எனலாம். இருந்தும் தவற்றை உணர்ந்து திருந்துவதே மனித இயல்பாகும். பகவான் அருள்கின்றார். "உங்கள் ஒவ்வொருவரினதும் இறந்த கால , நிகழ்கால, எதிர் கால நிகழ்வு கள் அனைத்தும் எனக்குத் தெரியும். ஆகையால் தான்கருணை காட்ட வேண்டும் என்ற எண்ணம் எழுந் ததே இல்லை. ஏன் ஒரு வருக்கு கஷ்டம் ஏற்படுகின்றது என்பது எனக்குத் தெரியும். அதன் விளைவும் தெரியும். நான் ஒருவருக்கு துன்பத்தை கொடுக்க நினைப்பதில்லை. உங்களின் சொல் , எண்ணம், செய்கையினாலேயே உங்களுக்கு ஏற்ற விலங்கை பூட்டிக்கொள்கிறீர்கள்" பகவான் இதனை மிகவும் வேதனையுடன் அருளுகின்றார். நீங்கள் புனித மானவர்களாய் இருந்தால் தான் என் அன்புக்கு பாத்திரமாக முடியும்.



Duty without love is Deplorable - Duty with Love is Desirable - Love, without Duty is Divine - Baba

ஜெய் சாயிராம்

யாதவன்

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை – பெரும் புயல் 'நிஷா' 2

என். விஜயன்

## நல்லூரில் வெள்ளம்

ஒரு நாள் இரவில் பெய்த மழை இந்தளவு தூரம் வெள்ளப் பெருக்காக மாறும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

நல்லூர் முருகன் ஆலய சுற்றாடல், வீரமாகாளி அம்மன் கோவில், கைலாசபிள்ளையார் கோவில், வைமன் வீதி, அத்தியடி உள்ளிட்ட பகுதியில் வெள்ளம் வழிந்தோட முடியாது நிறைந்து ததும்பியது.



வெள்ளப்பெருக்கின் வேகம் நல்லூர் கோவில் வீதியில் உள்ள மதில்களை உடைத்து உருசி பார்த்தோடு அங்கேயே தங்கி விட்டது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புகளின் குடியிருப்பு என வர்ணிக்கக்கூடிய நல்லூர் கோவில் வீதியில் தளம் தட்டிய வெள்ளம் அரச சார்பற்ற அமைப்புகளின் மதில்சுவர்களை முட்டி மோதி உடைத்து நிவாரணம் ஏதும் உண்டா? என கேட்பது போல உள்ளே நுழைந்து கொண்டது.

உறக்கத்தில் இருந்தவர்கள் நிலைமையை உணராமல் சதித்திட்டம் ஏதோ நடப்பதாகக் கருதிக் கொண்டனர்.

இன்னும் சிலர் ஒழுங்கான நிவாரணப் பணியை மேற்கொள்ளாததன் விளைவாக வெள்ளம் நீதி கேட்க வந்திருப்பதாக எண்ணிக் கொண்டனர்.



அவரவர் மனச்சாட்சிப்படி வெள்ளப்பெருக்கின் வருகைக்கு காரணம் கற்பித்தாலும் விடியற் பொழுதில் நிவாரணப்பணியை முடுக்கி விடும் பாரிய பணி தமக்கு உண்டென்பதை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.

## பாடசாலைகளில் மக்கள் தஞ்சம்

சற்றுத் தாழ்வான பிரதேசங்களில் வசித்தவர்கள் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தவுடன் கையில் கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக பாடசாலைகள், கோவில்களில் தஞ்சம் புகுந்தனர்.

யுத்தத்தினால் ஏற்பட்ட இடப்பெயர்வை மீண்டும் ஒரு தடவை ஞாபகப்படுத்தும் பணியை இயற்கையும் செய்து மகிழ்ந்தது.

பொது இடங்களில் தங்கியிருந்தவர்களுக்கு சமைத்த உணவை வழங்குமாறு யாழ். அரச அதிபர் பணிப்புரை வழங்க அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவுகள் இடம்பெயர்ந்த மக்களைர் பராமரிக்கும் பணியைச் செய்து முடித்தன.

## சேவை மனப்பாங்கு

கடும் மழை, புயல் என்பவற்றின் பாதிப்பு குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் உரியதாக இருந்த போதிலும் இடம்பெயர்ந்த மக்களைப் பராமரிப்பதிலும் தடைப்பட்டுப்போன சேவை வசதிகளை மீள அமைப்பதிலும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவர்கள் ஆத்மார்த்தமாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அவ்வகையில் இடம்பெயர்ந்த மக்களைப் பராமரிப்பதிலும் அவர்களுக்குத் தேவையான சமைத்த உணவு, குடிநீர் என்பவற்றை வழங்குவதிலும் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் கிராம மட்டப் பொது அமைப்புகள் ஆற்றிய பணி உயிரிலும் பெரியது.


தங்கள் வீட்டில் விழுந்த மரத்தை வெட்டாமல் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஓடி ஓடியோடி பணியாற்றிய உத்தமர்களுக்கு குடாநாட்டு மக்கள் என்றும் நன்றி பெருக்குடையவர்கள் ஆவார்.

இடம்பெயர்ந்து பொதுஇடங்களில் தங்கியிருப்பவர்களை பராமரிக்க, யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் பிரதேச சபைகள் குடிநீர் வழங்குவதிலும் தொற்று நோய் பரவாமல் தடுப்பதிலும் தீவிரமாகச் செயற்பட்டன.

## களத்தில் குதித்த யாழ். மின்சார சபை

பெரும் மழையுடன் வீசும் புயல் காற்றின் முதல் பணி மக்களை இருளில் மூழ்கடிப்பதுடன் தொடர்பாடல் வசதிகளையும் செயலிழக்கச் செய்வதுமாகும். அந்தப் பணியை நிஷா புயல் காற்றும் செய்யத் தவறவில்லை.

மழை நிலத்தைப்பதப் படுத்திக் கொடுக்க - புயல் சுழற்றி வீச, நிமிர்ந்து நின்ற மரங்கள் தரையில் சாய்ந்து சாவைச்சந்திப்பதே புயல் தரும் மரணத்தின் அடையாளம்.



வீழ்கின்ற மரங்கள் சாவின் விளிம்பிலும் தப்பித்துக் கொள்ளும் முயற்சியில் மின்சாரக்கம்பிகள், தொலைபேசி வயர்களை எட்டிப் பிடித்து தப்பித்துக்கொள்ள முயல்வது வழக்கம். அந்த வழமையில் விழுகின்ற மரங்களோடு சேர்ந்து மின்சாரக் கம்பிகளும், தொலைபேசி வயர்களும் அறுந்து அவலத்திற்கு ஆட்படும்.

அவற்றுக்குச் சிகிச்சை அளித்து உயிர்ப்பிக்க பல நாட்கள் செல்லும்.

எனினும் யாழ்ப்பாண மின்சார சபை உடனடியாகவே களத்தில் குதித்து செயலிழந்த மின்சார சேவையைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டது.

இரவிரவாக மின்சாரசபைப் பணியாளர்கள் மின் இணைப்புப் பணியில் ஈடுபட்டதன் பயனாக மின்சாரம் தடைப்பட்ட மறுநாளே யாழ். போதனா வைத்தியசாலைக்கு மின்னிணைப்பு வழங்க முடிந்தது. ஒரு சில நாட்களில் ஏனைய இடங்களுக்கும் மின் விநியோகம் வழங்கப்பட்டது. கடும் மழையினால், பெரும் புயலினால், இருளில் மூழ்கிய யாழ். குடாநாடு இத்துணை விரைவாக மின் வெளிச்சத்தை பெறும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

யாழ்ப்பாணம் மின்சார சபையின் பொறுப்பதிகாரி, தானும் களத்தில் இறங்கிக் கருமமாற்றினார் என மின்சார சபைப் பணியாளர்கள் கூறியபோது நெஞ்சம் நெகிழ்ந்தது. இத்தகைய அதிகாரிகளே எமக்குத் தேவை என்ற நினைப்பு வலுத்துக் கொண்டது. மின்சார சபைக்கு இணையாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனமும் தொடர்பாடல் சேவையை சீரமைப்பதில் முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு ,சூறாவளி போன்ற அனர்த்தம் வேறு எந்தப் பிரதேசத்தில் நடந்திருந்தாலும் மீட்புப்பணியில்-சேவை மீளமைப்பில் வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டிருப்பர். ஆனால் யாழ்ப்பாண மக்கள் தாமே தமக்கு ஏற்பட்ட அனர்த்தத்தை சமாளித்துக் கொண்டனர்.

இதுவே யாழ்ப்பாணத்தாரின் தனிச் சிறப்பு.

*(வளரும்)*

அன்பு வாசகர்களே!

வெள்ளப் பெருக்குத் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் தகவல்கள் தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. தங்களால் தரப்படும் புகைப்படங்கள், தகவல்கள் இப்பகுதியில் சேர்க்கப்படும். நேரிலோ தபால் மூலமோ விரைவில் ஒப்படைத்து உதவவும். (ஆ-ர்)

# தபால் மூலம் உரியவர்களிடம் கிடைக்கப்பெறாத வாகனப்பதிவு சான்றிதழ்களை யாழில் பெற்றுக்கொள்ளலாம்

## மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அறிவிப்பு

இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் கொழும்பில் இருந்து பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் வாகனப் பதிவுச்சான்றிதழ்கள் யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த வாகனப் பதிவு சான்றிதழ்கள் மோட்டார் வாகன திணைக்களத்தினால் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டபோதும் உரியவர் குறித்த முகவரியில் தற்போது இல்லாமையினால் அக்கடிதங்கள் யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே உரியவர்கள் தமதுதேசிய அடையாள அட்டை, பதிவுச்சான்றிதழுக்குரிய வாகன ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு நேரில் வந்து வாகனச்சான்றிதழ் மற்றும் வாகன பரிசோதனை தொடர்பான கடிதங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் யாழ். உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் கேட்டுள்ளார்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற வாகனப் பதிவுச்சான்றிதழ்களின் உரிமையாளரின் பெயர், மோட்டார் வாகன இலக்கம் ஆகியன வருமாறு;

**வாகன உடைமை மாற்றம் தொடர்பான கடிதங்கள்**

**வாகன இலக்கம்;**

NPGV -9127,NPGH -6147,150-8416, 500 - 1304, 204 - 2711, 41 - 7387, NPHN - 9061, NPJM - 7010, 501 - 0145,NPHF - 7634, NPHN - 7417, 19 - 4909, NPGQ - 2118, 14 - 8699, NPHL - 7233, 500- 0360, 13-8097,1-4085,4-0633, 84-1762, NPMQ-2806, NPMM - 5960, 201-4646, NPHB - 4865, NPGY-9681, NPSB-0611, NPMF-8079, NPMH-2954, NPQB - 8128, NPJD-1727, 28-1214, NPTZ-9332, NPJG-0347, NPMO-3597, NPHF-4111, 130-9286, 202-0055, 500-5082, NPMQ-1459, NPMS-1067, NPHX-2981, NPHN-7426, 500-4595, NPJY-7102, NPHG-2444, NPJX - 9580, NPHB-5437, 207-1618, 251-8646, NPJO-2580, NPMC-0024, NPMH-2944, NPHY-7567, NPGQ- 2014, NPMC-7682, NPHK-7354, NPGY-6742, NPGT- 4372, NPGH - 0118, NPHE-6901, NPJS-7029, 70-9505, 14-3022, 500-3863, 36-0634, 70-8435, NPJV-9028, 500-6932, NP MC -9610, NPMC-9718, NPGH-59 66, 206-6517, NPGH - 5988, NPGS-6692, NPME - 7762, 500-8171, NPGN -0219, 96-7787, NPHV - 9139, NP GQ-9868, 30-9072, NP MU- 1963, 41-7638, 151-9127, 92-4941, NP MG-6673, NPJY-8386, NPJE -6011, 27-6156, NPHJ-8742, 24-8639, NPGS-4415, NPME -5645, NPMW-3969,NPGC -6486, 83-5326, 500-8773, NPMN-8513, 500-6794, 83-5326, 500-2839, NPJU-7169, NPGY- 6718, NPJK-4717, NPHZ-6308, 500-8773, 71-7291, 136-1501, 40-5016, 500-0487, NPHB-7515, 01-3162, NPJK-9869, NPHN-5906, 54-3781, NPJR-2268, 06-4807, 205-7227, 124-1873, 05-8306, 27-2863, 21-8521, NPMA-1842, NPMH-5304, 500-5510, 500-5251, NPJO-1506,NPMC- 7040,

**வாகனப்பதிவுச் சான்றிதழ்கள்**

**கார்**

03 Sri 4895, ப.சேவியர்- நல்லூர், 07 Sri 7788, ந.சிவகுமார் - சாவகச்சேரி.

**முச்சக்கர வண்டி**

203-2663 த.தயாபரன்-வட்டுக் கோட்டை, 203-8119 க. தங்கராஜா - மீசாலை, 21-7335 ஐ.குணரட்ணம்-சாவகச்சேரி, 21-8122 யோ.குஜெந்தன்-கொடிகாமம், 21-8521 க.குலேந்திரன்-யாழ்ப்பாணம், 500-7707 ம.யோகீஸ்வரன் - யாழ்ப்பாணம், 87-9359செ. மயூரன் - யாழ்ப்பாணம், NP GX - 8778பா. துஸியந்தன்-திருநெல்வேலி, NPHQ-8127சி.பேரின்பநாயகம் - நல்லூர் NPJQ-8183ந.ஜெயக்காந்தன்-யாழ்ப்பாணம்.

**மோட்டார் சைக்கிள்**

07-8214 ச.தவரட்ணம்-மிருசுவில், 125-4006 அ.நசீர்-யாழ்ப்பாணம், 144-8961 மு.நந்தன்-யாழ்ப்பாணம், 145-4035 கா.சிவராஜா- சுன்னாகம், 145-0496 சி.ராஜசேகர்-யாழ்ப்பாணம், 155-8648 த.ஞானசேகரம்-காங்கேசன்துறை, 500-0590 ந.நந்தகுமார்-சித்தன்கேணி, 500-1428 செ.ஜெகதீஸ்வர - சாவகச்சேரி, 500-1569 பா.பொன் னம்பலம் - கோண்டாவில், 500-2547 சி.மோகனபதி - திருநெல்வேலி, 500-2670 சி.அந்தோனி - குருநகர், 500-3282 ஐ.விஜயராசா - வண்ணார்பண்ணை, 500-9021 செ.கோகிலன்-உரும்பிராய், 84-5118 கோ.கிருபானந்தன் - புங்குடுதீவு, 86 Sri 8226 செ.கிருஷ்ணகுமார் - காங்கேசன்துறை, NPGD - 5566 சி.இரவீந்திரதாஸ் - திருநெல்வேலி, NPGF-6669 சி.யோகீஸ்வரன்-சுன்னாகம், NPGH-0046 தெ.சத்தியசங்கர்-யாழ்ப்பாணம் NPGH-6104ச.பிரகதீஸ்வரன்-யாழ்ப்பாணம், NPGL-9055 ஐ.சிவநேசன்- அரியாலை, NP GO - 6473, செ. செல்வகுமார் - கொடிகாமம், NP GO - 6550சி. இராசரத்தினம் - சாவகச்சேரி, NP GP - 8453 து.சிறிதரன்- யாழ்ப்பாணம், NPGQ - 2250அ.சிவவிநாயகம்- வல்வெட்டித்துறை, NPGQ -2450 நா. சுதாகரன் - தெல்லிப்பளை, NP GZ - 0030 அ. தவச்செல்வன் - அச்சுவேலி, NP GZ - 0249 பூ.தேவராசா - உரும்பிராய், NPHA - 6108 செ.விமலேஸ்வரன் - நீர்வேலி, NP HC - 2575 இ.சுரேந்திரன் - யாழ்ப்பாணம், NP HD - 5428 சி.குகதர்சன் - சாவகச்சேரி, NP HM- 4607சி.சதீஸ்குமார் - மல்லாகம், NP JE - 1521 ம.வின்சலஸ் - யாழ்ப் பா ணம், NPJZ - 9345 ப.கண்ணதாசன்- இணுவில், NP MB - 2851வே.தனகுமார் - சாவகச்சேரி, NP MF - 5740 வே. விஜயகுமார் - மல்லாகம், NP MR - 0298 சு. சுதானந்தன்-கோண்டாவில்.

**லொறி**

28 Sri 3389 க. யோகராசா - உடுவில்.

---

# பட்டதாரி ஆசிரியர் ...

யரசி கோபாலபிள்ளை- மதீனா வித்தியாலயம், சுந்த ரேஸ்வரன் சிவனருட்செல்வி-வியாவில் சைவ வித்தியாலயம், யமுனா திருஞானசெலவம்- நாகர்கோவில் மகா வித்தியாலயம், கேமா கந்தராசா- நாகராஜா வித்தியாலயம், நல்லநாதன் செந்தில்நாதன்- செல்லியாதீவு அ.த.க பாடசாலை, தில்லையம்பலவாணர் விமலன்- தருமபுரம் மகா வித்தியாலயம், கங்காதரன் அனுராகரன் -வல்வெட்டி இ.த.க பாடசாலை, துரைறஜனி லாசரு -இராமநாதபுரம் மகா வித்தியாலயம், செல்வராணி கந்தையா -தொண்டைமானாறு மகா வித்தியாலயம், ஜெயசிங்கம் உதயன்-நெடுந்தீவு மகா வித்தியாலயம், இலகுப்பிள்ளை வாகீசன் -தலைமன்னார் பியர் அ.மு.க பாடசாலை, விமலன் சந்தானலக்ஷ்மி- உருத்திரபுரம் மகா வித்தியாலயம், செல்வராசா மகிந்தன்-மருதங்கேணி இ.த.க பாடசாலை, சோபினி இமானுவேல் -மாவலித்துறை- றோ.க.த.பாடசாலை,

வைலற் நீக்கிலாஸ் -அக்கராயன் அ.த.க பாடசாலை, ஜெயகலா மயில்வாகனம் -கண்டாவளை மகா வித்தியாலயம, கந்தசாமி கயேந்திரகுமார்-கரவெட்டி ஸ்ரீ நாரதர் வித்தியாலயம், தெட்சணாமூர்த்தி கீதாம்பரன் -தம்பாட்டி அ.த.க.பாடசாலை, திரு.சிதம்பரநாதன் சிவகுமார் -இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை, பிறியிற்றெனுஜா தேவநேசன்- சூரியகட்டைக்காடு றோ.க.த.கபாடசாலை, வேலாயுதபிள்ளை தயாளன்- கோவிலகண்டி மகாலக்ஸ்மி வித்தியாலயம், சுரேஷியா சந்திரசேகரம்- அடம்பன் மத்திய மகா வித்தியாலயம், மாலதி சுப்பிரமணியம் -தருமபுரம் மகா வித்தியாலயம், வேலாயுதம் அருள்செல்வம் -பாரதி வித்தியாலயம், தயாமதி சின்னத்துரை -பாரதி வித்தியாலயம், கனகலிங்கம் மதிரூபன்- நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், ஜெயசோதி கணபதிப்பிள்ளை- கரம்பன் சண்முகானந்தா மகா வித்தியாலயம், காந்தரூபன் தயாளினி- அடம்பன் மத்திய மகா வித்தியாலயம், பாமதி சிவராசா - நாகர்கோவில் மகா வித்தியாலயம், தயாநிதி சண்முகலிங்கம் -அருவித்தோட்டம் சிவானந்தா விததியாலயம், சுதர்சலா துரைராசா- கிளிநொச்சி இந்துக்கல்லூரி, பகீரதன் சகுந்தலா -குடத்தனை அ.த.க பாடசாலை, கல்பனா இராசசிங்கம் அக்கராயன் மகா வித்தியாலயம்,

சக்திநாதன் சிவகௌரி -கற்பகபுரம் அ.த.க பாடசாலை, முத்துச்சாமி சர்மா இரகுநாதன் -திருஞானசம்பந்தர் வித்தியாலயம், ரமேஷ் பிரகாஷ்- மல்லாவி மத்திய கல்லூரி, விசாமினி விசாகரத்தினம்- கண்டாவளை மகா வித்தியாலயம, ஜெயகாந்தன் மிதிலா -அக்கராயன் மகா வித்தியாலயம், சக்கரியாஸ் ஸ்ரெலன் கருணைதாஸ்-

அறபா வித்தியாலயம், மேகலா மருதலிங்கம் -எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை, ஜெயசுரேஷ் வித்யா- மந்துவில் றோ.க.த.பாடசாலை, பிரான்சிஸ் ஜெனிற்ரஸ்- இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை, சிவசோதி ஐயாத்துரை- கருங்கண்டல் றோ.க.த.க பாடசாலை, சௌந்தரராணி தங்கவேல்- விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் (புளியங்குளம்), கிரிசாந்தி தில்லையம்பலம்- புதுக்குளம் மகா வித்தியாலயம், ஸர்மினி பாலசுப்பிரமணியம்- சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம், தனபாலர் கோணேஸ்வரன்-

மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம், பாலகுமாரன் ரஜனிமலர்- அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம், சந்தியோகு எட்வின் நேசரத்தினம் -இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை, இராசேந்திரன் குணாகரன்- புதுக்குளம் மகா வித்தியாலயம், முகுந்தன் தயாநிதி- தரணிக்குளம் கணேசா வித்தியாலயம், புஷ்பகாந்தினி கார்த்திகேயன்- இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை, கந்தையா சண்முகானந்தன்- மண்டை தீவு றோ.க.த.பாடசாலை, குமாரசிங்கம் மனோகரன்- கெற்பலி அ.த.க பாடசாலை (மிருசுவில்),

சதிஜினி சிவராசசிங்கம் -நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், கெங்கேஸ்வரி சண்முகராசா -செக்கடிப் புலவு அ.த.க பாடசாலை, துஸ்யந்தன் காயத்திரி-மாதர்பணிக்கர் மகிழங்குளம் அ.த.க பா, அருந்ததி சிவக்கொழுந்து- தரணிக்குளம் கணேசா வித்தியாலயம், ரேவதி கதிர்காமநாதன்-பாரதி வித்தியாலயம், பொன்னையா தர்மேந்திரா புதுக்குளம் மகா வித்தியாலயம், நவரட்ணம் சத்தியரூபன்- மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம், வினோதினி பாலகிருஷ்ணன்- கல்மடு படிவம் 01 அ.த.க.பா (கல்மடுக்குளம்), சுதர்சன் சசிகலா- விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் (புளியங்குளம்), குலசிங்கம் செல்வக்குமரன்-

வியாவில் சைவ வித்தியாலயம் தயாபரன் செல்வலஷ்மி- கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம், சுகந்தகுமாரி ஜெராட் அல்பேட்- சுந்தரபுரம் அ.த.க பாடசாலை, பிரபாகரன் ஸ்ரீரஞ்சனி -தருமபுரம் மகா வித்தியாலயம், அன்ரன்யூத் செல்வறாஜா துளசி -புனித பற்றிமா றோ.க.த.க பா.,சுகந்தினி கந்தையா- கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை, யோகேஸ்வரி செல்லையா- மாசர் அ.த.க.பாடசாலை.

..............................


**கடை வாடகைக்கு**

**கடை வாடகைக்கு கொடுக்கப்படும்**

தொடர்பு:-

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**

**யாழ்.வீதி மானிப்பாய்**

**T.P:- 021 222 7543**

(001615)



**வட இலங்கைச் சங்கீத சபை**

**2009 ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் 05.12.2008 ஆம் நாள் வரை ஏற்றுக் கொள்ளப்பெறும்.**

வ. இ. ச. சபை,
கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

அ. தற்பரானந்தன்
செயலாளர்.

# அம்பாறையில் தாக்குதல் அதிரடிப்படையினர் மூவர் பலி

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய இரு வேறு தாக்குதல் சம்பவங்களில் சிறப்பு அதிரடிப்படையினர் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது, கஞ்சிக்குடிச்சாறு வனப் பகுதிக்குள் நேற்று புதன்கிழமை 3 மணியளவில் சிறப்பு அதிரடிப்படையினர் ஊடுருவல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இவர்கள் மீது விடுதலைப் புலிகள் பொறிவெடித் தாக்குதலை நடத்தியதில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

இத்தாக்குதலை தொடர்ந்து கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியை நோக்கி படையினர் மோட்டார் மற்றும் கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

இதேவேளை உகந்தையிலிருந்து கும்புக்கன் ஓயா நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் வீதிக்கண்காணிப்பில் சிறப்பு அதிரடிப் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் மீது நேற்று மாலை 5.25 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதலை நடத்தினர். இதில் சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். ஏனையோர் அவ்விடத்தினை விட்டு தப்பியோடினர்.

இதனைத் தொடர்ந்து அவ்விடத்துக்கு பவள் கவச வாகனத்தில் வந்த சிறிலங்கா அதிரடிப்படையினர் கொல்லப்பட்டவர்களின் உடலங்களை மீட்டுச் சென்றதுடன் அப்பகுதியில் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூட்டினை நடத்தியுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர். (ச-5)

# பாக்.தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் இலங்கையூடாக நுழையத் திட்டம்

## வைகோ குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கை இராணுவம் பாகிஸ்தானுடன் இணைந்து செயல்படுவதால் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கை வழியாக இந்தியாவின் தெற்கு பகுதியில் நுழைந்து தாக்கும் ஆபத்து உள்ளது.

இந்திய அரசு இதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, மும்பை தாக்குதல் குறித்து மூன்று மாதங்களுக்கு முன்பே உளவுத்துறை தகவல் அளித்தும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் இலங்கை அதிபர் ராஜபக்ஷவுடன் கைகோர்த்துக் கொண்டு இலங்கைக்கு இராணுவ உதவி, ஆயுத உதவிகளை அளிப்பதிலேயேதான் கவனம் செலுத்தினார்.

அதனால்தான் இத்தனை பெரிய கோரச் சம்பவம் நடந்துள்ளது. எனவே அவருக்கு கண்டனம் தெரிவிக்கின்றேன் என அவர் மேலும் கூறினார். (ஏ)

## மாட்டீன் வீதி வரையுமான...

தளபதி பிரிகேடியர் குலதுங்க மற்றும் மேஜர் பெரேரா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பில் யாழ்.மக்களின் போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் படைத்தளபதிகளுக்கு சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினர் எடுத்துரைத்தனர்.

இதில் யாழ்.வேம்படிச்சந்தியிலிருந்து மாட்டீன் வீதி வரையிலான யாழ். போதனா வைத்தியசாலை வீதியில் போடப்பட்டுள்ள வீதித்தடையை நீக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு அமைய அவ் வீதித்தடையை அகற்றுவதாக தளபதிகள் உறுதியளித்தனர்.

இதேவேளை 51-வது படையணித் தளபதிகளும் சமாதானத்திற்கும் நல்லெண் ணத்திற்குமான மக்கள் குழுவினரும் யாழ்.-தீவகம் பண்ணை வீதியில் அண்மைய இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட சேதம் தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டனர். அப்போது குறித்த வீதியை வீதி அபிவிருத்தி அதிகார சபையினருடன் பெருமளவு படையினர் இணைந்து வீதியைத் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர். (ஏ-5)

## கிளஸ்டர் குண்டை...

கிளஸ்டர் குண்டுகள் எனப்படும் கொத்தணி குண்டுகள் சாதாரண பொதுமக்களைப் பொறுத்தவரை நிலக்கண்ணி வெடிகளைப் போலவே. அதேவேளை ஆபத்தானவை என்று வர்ணிக்கப்படுகின்றது.

யுத்தகளத்தையே அதிரவைக்கின்ற கொத்தணி குண்டுகள் விமானத்திலிருந்து வீசப்படுகின்றன. இந்த கொத்தணிக் குண்டுகளைவைத்துக் கொண்டு விமானத்திலிருந்து அந்த குண்டுகள் வீசப்படுகின்ற போது அது கீழே விழுந்து வெடித்துச் சிதறி அதிலிருந்து பல குண்டுகள் அந்தப் பகுதிகளிலிருந்து படிப்படியாக வெடித்துச் சிதறுகின்றன.

இதனால் அந்தக் குண்டு வீசுகின்ற பிராந்தியமே பெரும் ரணகளமாகும். ஆனால் இராணுவ ரீதியாகக் கூடகாலத்துக்கு ஒவ்வாதவை என்றும் தார்மீக ரீதியாகக் கூட பொருந்தாதவை என்றும் இத்தகைய குண்டுகளை எதிர்ப்பவர்கள் அவற்றை விபரிக்கின்றார்கள்.

இக் கொத்தணிக் குண்டை தடைசெய்வது குறித்து ஒஸ்லோவில் நடைபெற்ற கூட்டத்தில் பல நாடுகள் கலந்து கொண்டு கையெழுத்திட்டன. ஆனால் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. ஆனால் முன்னர் இருந்ததைப் போன்று இந்த விவகாரம் நாளோட்டத்தில் ஒரு பெரும் பிரச்சினையாக இருக்காது என்கின்றார் வாஷிங்டனைத் தளமாகக் கொண்ட ஆயுதக் கட்டுப்பாட்டு அமைப்பின் ஜெத் அப்ரம்ஷன்.

தற்போது இந்த உடன்பாட்டில் கையெழுத்திடாத நாடுகள் சர்வதேச விதிமுறைகளுக்கு விரோதமாக இப்படியான நிலக் கண்ணி வெடிகளை உபயோகிக்க மாட்டோம் என்று கூறுகின்றன.

தற்போதைய இந்த ஒப்பந்தம் பழைய கொத்தணி குண்டுகளையே தடை செய்யுமென்றும் சில நாடுகளால் புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் நவீன ரக குண்டுகளை இது தடுக்காது என்பதால் அவற்றின் மூலம் பெரும் பாதகம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை அந்தமாதிரி சாதாரண பொது மக்களுக்கு ஊறு விளைவிக்கும் எந்தவொரு குண்டையும் நாங்கள் பயன்படுத்துவதில்லை. நாங்கள் பொதுமக்களுக்கு சிரமம் கொடுக்கும் எந்தவொரு ஆயுதத்தையும் பயன்படுத்துவதுகிடையாது. எங்களது முழு முயற்சியே பொதுமக்களை விடுதலைப் புலிகளின் கொடூர நடவடிக்கைகளில் விடுவிப்பது என்பதை நோக்கமாகக் கொண்டது என அமைச்சர் ஹெலிய கூறியுள்ளார். (ச)


புதிய கல்வியாண்டிற்கான
புதிய பாடஅலகுகள்
டிசம்பர் 10இல் ஆரம்பம்

ஆரம்பப்பிரிவு தரம் 3,4,5 வகுப்புக்கள்
தரம் 06 முதல் O/L வரையான வகுப்புக்கள்
English Medium Classes

இன்று முதல் டிசம்பர் 15 வரை மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும்

The Express Institute
Irupalai, Kopay.
அதிபர்


# மகிந்தவின் ஜனாதிபதி ஆட்சியில் 12 ஆயிரம் படையினர் உயிரிழப்பு

## ஐ.தே.க.தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூன்று வருட ஆட்சியில் மாத்திரம் யுத்தத்தினால் 12 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, அத்துடன் யுத்தத்தில் 12 ஆயிரத்திற்கும் அதிகமான படையினர் வலுவிழந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் உயிரிழந்த படையினர் 19 வயதுக்கும் 27 வயதுக்கும் உட்பட்டவர்கள். இவர்களில் எட்டாயிரம் பேர் வரை திருமணம் செய்தவர்கள் எனவே இவர்கள் உயிரிழந்தமையை அடுத்து இவர்களின் மனைவியர் அனைவரும் விதவைகளாகியுள்ளதாக பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார். இவர்கள் மீண்டும் திருமணம் செய்தால் அவர்களுக்கு தமது கணவன்மார்களுக்காக கிடைக்கும் இழப்பீட்டுத் தொகை கிடைக்காமல் போய்விடும் என்று பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடம் கிழக்கு மாகாணத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெறவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. எனினும் கேணல் ராமின் தலைமையிலும் ஏனைய தளபதிகளின் தலைமையிலும் அம்பாறை மட்டக்களப்பு உட்பட்ட பகுதிகளில் 6 மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னியில் ஒவ்வொரு நாளும் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அங்கும் 13 இடங்களில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் இழப்புகளை குறைத்து யுத்தத்தில் வெற்றி பெறுவதை விட இழப்புகளை அதிகமாக்கி நிலங்களை கைப்பற்றுவதில் பயன் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் இந்த வருட மாவீரர் நாள் உரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின்போதே தமது வலுவைக் குறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது என பாலித ரங்கே பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## மழை ஓய்ந்து...

நடவடிக்கைகளை நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பித்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை அடம்பன் தெற்கில் புலிகளின் பதுங்கு குழிகள் பலவற்றை படையினர் தாக்கியழித்தபோது புலிகளுடன் கடுமையான மோதல்கள் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை பரந்தன் மேற்கில் முதலாவது அதிரடிப்படைக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று கடும் மோதலில் புலிகள் தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

யாழ்.முகமாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ள மோதலில் இரு புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. (ச)

## யாழ்ப்பாணத்...

களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நலன்புரி நிலையத்தில் இருக்கும் 3 மாணவர்கள் க.பொ.த. சா/த பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நலன்புரி நிலையத்தில் இருக்கும் மக்களின் பொழுது போக்கு நடவடிக்கைக்காக புதினத்தாள்கள், சஞ்சிகைகள், தொலைக்காட்சிப் பெட்டி, விளையாட்டு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளதாகவும்,

மேலதிகமாக இடம்பெயர்ந்துவரும் மக்களை தங்க வைப்பதற்கு ஏதுவாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உள்ள கட்டடத் தொகுதியில் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-ஓ)

## கிளிநொச்சி...

யினர் நேற்று காலை வான்தாக்குதல் நடத்தியுள்ளனர். காலை 9.45 மணியளவில் குறித்த பகுதியிலுள்ள விடுதலை புலிகளின் இனங் காணப்பட்ட இரு இலக்குகள் மீது விமானப் படையினர் வான் தாக்குதல் நடத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ச-5)

# மரக்கறி வகைகளுக்கு யாழில் தட்டுப்பாடு

யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட மழை வெள்ளம், புயற்காற்று அனர்த்தத்தை அடுத்து மரக்கறி வகைகள் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. காலநிலை சீரடைந்து புதிதாக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு மரக்கறி வகைகளை அறுவடை செய்யும் வரை இந்த நிலை நீடிக்கலாம் என பாவனையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

தொடர் மழையினால் அனைத்து பயிர்ச் செய்கை நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கி முற்றாக அழிவடைந்துள்ளன. பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களில் அழுகிய மரக்கறிக் கழிவுகளும் சேதமடைந்த பயிர்களின் கழிவுகளும் மட்டும் காணப்படுகின்றன. மரக்கறி பயிர்களான முட்டைக்கோவா, கரட், மரவள்ளி, கருணைக்கிழங்கு, மிளகாய், கத்தரி, பாகற்காய், புடோல், கறி மிளகாய் ஆகியன முற்றாக அழுகி சேதமடைந்துள்ளது.

கடந்த சில தினங்களாக மரக்கறி வகை விற்பனை செய்யப்படும் சந்தை மற்றும் வியாபார நிலையங்கள் அனைத்தும் வெறிச் சோடிய நிலையில் காணப்படுகின்றன. (ச-5)


இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகர் திருச்செல்வத்திற்கு சமூக சேவைக்கான உயர் விருது



ஸ்ரீலங்கா நூலக சேவை இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகரும் பத்திரிகையாளருமான

திரு. ஏ.என்.எஸ்.திருச்செல்வம்

அவர்களின் சமய, சமூக, கல்வி, கலை, கலாசார சேவைகளைக் கௌரவித்து பருத்தித்துறை பிரதேச கலாசார பேரவையின் முத்தமிழ் விழாவிலே யாழ். அரச அதிபர் கே.கணேஷ் 'சமூக சேவைக்கான உயர் விருதை' வழங்கிக் கௌரவித்துள்ளார்.

இதனால் மனமகிழ்வுறும் நாங்கள் அவரது சேவைகளைப் பாராட்டி மேலும் சேவை சிறக்க எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

கலைஞர் வட்டம், பருத்தித்துறை.

இராசையா பஞ்சலிங்கம், பொ.மகாதேவா.

(C-1818)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை. பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.